


தமிழரசு
16-2-1976
Sami
50

# அரசு – மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

**ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்**


## அரசு – வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



# தமிழக மக்களுக்குப் பிரதமர் அளித்த உறுதி!





## இந்தியைத் திணிக்கமாட்டோம்!

"இந்தி மொழியைக் கற்கும்படி மக்களைக் கட்டாயப்படுத்த, வட இந்தியாவில் உள்ள சில கட்சியினர் முயற்சி செய்து வந்தது உண்மை. ஆனால் அவ்வாறு செய்தது எங்கள் கட்சியல்ல...... தேசிய இணைப்பு மொழியாக ஒன்றைக் கொள்வது நல்லது என்று நாங்கள் ஆரம்பகாலம் முதலே சொல்லி வந்த போதிலும், இங்குள்ள எவரையும் எந்த மொழியையும்—அந்த மொழியைக் கற்க விரும்பாத எந்த ஒரு ஆணையோ அல்லது பெண்ணையோ—கற்றுக் கொள்ளும்படி திணிக்கவில்லை அல்லது கட்டாயப்படுத்தவில்லை.

"உண்மையிலேயே, மும்மொழிக் கொள்கைத் திட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொண்ட பிறகு, வடக்கே உள்ள ஏராளமான பள்ளிகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், வங்காளம் போன்ற மொழிகளைக் கற்பித்து வருகின்றன. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு மொழிப் பிரச்சனையில் என்ன கொள்கையைக் கொண்டிருந்தோமோ அதே கொள்கையைத்தான் இப்பொழுதும் கொண்டிருக்கிறோம் என்பதை நமது மக்கள் அனைவருக்கும் தெளிவுபடுத்தியுள்ளோம். அதாவது இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளுக்கும் நாங்கள் சம அந்தஸ்து அளிக்கின்றோம்; நிதி உதவி செய்கின்றோம்; எல்லா மொழிகளும், அவைகளின் இலக்கியங்களும் வளர உதவுகின்றோம்.

## தமிழ் மொழியை வளர்த்திடுவோம்!

"தமிழ், இந்தியாவின் மிகத் தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்றாகும். தமிழ் ஒரு அழகான மொழி; வல்லமை மிக்க ஒரு மொழி (பலத்த மகிழ்ச்சி ஒலி). தமிழ் மொழிக்கு நாங்கள் எல்லா வகையிலும் சிறந்த பணி செய்கின்றோம். 'சாகித்ய அக்காடமி' தமிழில் உள்ள தொன்மையான நூல்களையும், புதிய நூல்களையும் பிற மொழிகளில் மொழி பெயர்த்து வருகிறது. இதனால் தமிழ் தெரியாதவர்களும் தமிழ் நூல்களில் உள்ள அரிய கருத்துக்களை அறிந்து மகிழ முடியும்.

"இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மண்டலமும்—அது சிறிய மண்டலமாக இருந்தாலும் அல்லது பெரிய மண்டலமாக இருந்தாலும்— தங்களுடைய கலாச்சாரத்தையும், தனித்தன்மையையும் மேம்படுத்தி கொள்ள எவ்வித தடையும் கிடையாது. ஆனால், அவ்வாறு செய்வது, இந்திய தேசிய ஒருமைப்பாட்டையோ அல்லது ஒரு இந்தியனுக்கும் மற்றொரு இந்தியனுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை உணர்ச்சியையோ அழிப்பதாக இருக்கக் கூடாது."

## தமிழகத்தை முன்னேற்றிடுவோம்!

"தற்பொழுது தமிழகத்தைப் பொறுத்தவரையில் நமது முதல் வேலை, தமிழகத்தினை மேம்படுத்துவதற்குரிய விரைவான, உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதுவேயாகும். நீங்கள் திறமை வாய்ந்தவர்கள். உங்கள் திறமையைத் தமிழகத்தின் எல்லைக்குள் நிருபித்துக் காட்டியதோடல்லாமல், இப்பெரிய நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரப்பியுள்ளீர்கள். இந்த திறமையும், இந்த ஆற்றலும் மிகமிகச் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இதனால், வீணாகக் கழிந்த காலத்தை ஈடுசெய்து, நீங்கள் மீண்டும் பொருளாதார முன்னேற்றத்தில் முன்னோடியாக விளங்க முடியும்."

## நிருவாகத்தை மேம்படுத்துவோம்!

"தமிழகத்தின் நிருவாகம் நியாயமானதாகவும், தூய்மையானதாகவும், திறமையானதாகவும், உடனுக்குடன் செயல்படுவதாகவும் அமைந்திட நாங்கள் ஆவன செய்வோம். இதற்கு உங்கள் ஒத்துழைப்பை வேண்டுகிறேன்."

—இந்திரா காந்தி

[சென்னை மெரினா கடற்கரையில் 15-2-1976 அன்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு சில பகுதிகளின் தமிழாக்கம்.]

# பிரதமரின் 20 அம்ச பொருளாதாரத் திட்டம்



(1) அவசியப் பொருட்களின் விலை வாசியைக் குறைக்கத் தொடர்ந்து நடவடிக்கை; உற்பத்தி, கொள்முதல், விநியோகச் சீரமைப்புத் திட்டம்; அரசின் செலவில் சிக்கனம்.

(2) நில உச்சவரம்புச் சட்டம் தீவிரமாக அமல் படுத்தப்படும். உபரி நிலங்கள் ஏழைகளுக்கு விரைவாக வழங்கப்படும். நில உடைமை பற்றிய சான்றுகள் தயாரிக்கப்படும்.

(3) நிலமற்ற ஏழை மக்களுக்கு வீட்டு மனைகள் விரைவாக வழங்கப்படும்.

(4) தொழிலாளர்களை அடிமை போல் நடத்துவது, பிணைப்புமுறை சட்டவிரோதமாக அறிவிக்கப்படும்

(5) கிராமப்புற மக்களின் கடன்சுமை, நீக்கப்படும். நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், கைவினைஞர்களிடமிருந்து கடன் வசூலிப்பதை நிறுத்திவைக்கச் சட்டம் கொண்டு வரப்படும்.

(6) விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியம் பற்றி மறு ஆய்வு செய்யப்படும்.

(7) புதிதாக 50 இலட்சம் எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி செய்து தரப்படும். நிலத்தடி நீரைப்பயன்படுத்த நாடு தழுவிய திட்டம் வகுக்கப்படும்.

(8) மின்சாரத் திட்டங்கள் முடுக்கி விடப்படும். பெரிய அளவிலான அனல் மின் நிலையங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் அமைக்கப்படும்.

(9) கைத்தறித் தொழில் வளர்ச்சிக்குப் புதிய திட்டம் வகுக்கப்படும்.

(10) சாதாரண மக்கள் அணியும் துணிகளின் தரம் அதிகரிக்கப்பட்டுத் தாராளமாகக் கிடைக்க வழி செய்யப்படும்.

(11) நகர்ப்புற மற்றும் நகர்ப்புறமாக்கக் கூடிய பகுதி நிலங்கள் சமூக உடைமையாக்கப்படும். காலி நில உடைமைக்கு உச்சவரம்பு கொண்டு வரப்படும்.

(12) அரசுக்குத் தெரியாமல் பெரும் செலவில் வீடுகள் கட்டுவது, வரி ஏய்ப்பு ஆகியவற்றைக் கண்டுபிடிக்கத் தனிப் படைகள் அமைக்கப்படும். வரி ஏய்ப்பு, பதுக்கல், கடத்தல் போன்ற பொருளாதாரக் குற்றங்கள் செய்வோருக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும்.

(13) கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய தனிச் சட்டம் வரும்.

(14) தொழில் முதலீடுகளுக்கான வரைமுறைகள் தளர்த்தப்படும். லைசென்சுகளைத் தவறாகப் பயன்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(15) தொழில்கள், தொழிற்சாலைகளில் தொழிலாளர்களும் நிர்வாகத்தில் பங்கு பெறப் புதிய திட்டங்கள் வகுக்கப்படும்.

(16) சாலைப் போக்குவரத்து, தேசீய மட்டத்தில் அனுமதி வழங்கும் திட்டம் வரும்.

(17) மத்தியதர, மாத வருவாய் உள்ளவர்களுக்கு நிவாரணம் தர வருமான வரி வரம்பு ரூபாய் 8,000 ஆக உயர்த்தப்படும்.

(18) விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அவசியமான பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்கப்படும்.

(19) மாணவர்களுக்கு நோட்டு, புத்தகங்கள் மற்றும் இதர பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு வழங்கப்படும்.

(20) எல்லா மக்களுக்கும், குறிப்பாக எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு, பயிற்சி வாய்ப்பை அதிகரிக்க உதவித் தொகையுடன் கூடிய பயிற்சித் திட்டம் வகுக்கப்படும்.

# ஆளுநர் கருத்துரைகள்



## கிராம அபிவிருத்திக்கு

"கிராமப்புறத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஏற்படுவதற்கு, திட்ட நிபுணர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் எஞ்ஜினீயர்கள் ஆகியோர் சேர்ந்து ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை வகுக்க வேண்டும்.

"தமிழ்நாட்டில் பத்து கிராமங்களில், கிராம வளர்ச்சி நடவடிக்கையை மேற்கொள்வதற்கு விரிவான திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டு வருகின்றன.

"திட்டமிடுவது என்பது கிராம மட்டத்திலிருந்தே துவக்கப்பட வேண்டும். இல்லையேல் வளர்ச்சியடையாத கிராமப் புறத்துக்கும் வளர்ச்சியடைந்த நகர்ப்புறத்துக்கும் இடையே பெரும்வேறுபாட்டு இடைவெளி தோன்றிவிடும்.

"கிராம மட்டத்தில் திட்டமிடுவதன் மூலம் வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கு வகை செய்ய முடியும். அத்துடன் பரம்பரைக் கைவினைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் போன்றவை புத்துணர்ச்சி பெறும். உள்ளூரில் வீணாகி விரயமாகும் வளங்களை, சிறுதொழில் பிரிவினர் பயன்படுத்தி, அத்தியாவசியப் பண்டங்களைத் தயாரித்து விற்கக்கூடிய நிலை உருவாகும்.

"கிராம மக்களின் வாழ்க்கை நிலை, அவர்களின் தேவை, கிடைக்கும் வளங்கள் ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்து கிராம வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை ஒன்றை வகுப்பதில் இத்துறையில் பயிற்சி பெற்றவர்களின் ஆலோசனை பெறப்படுகிறது. மாநில அரசு, மத்திய அரசு ஆகியவை மேற்கொள்ளும் திட்டங்களோடு துணைத் திட்டங்களை காந்தி கிராமத்தில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது."

**—8-2-76-ல் காந்தி கிராமத்தில், கிராம வளர்ச்சிக்கான விஞ்ஞானம் தொழில்நுட்பம் பற்றிய கருத்தரங்கைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை...]**

## சென்னை நகரை அழகுபடுத்த

"சென்னை மாநகரைச் சுத்தமாகவும் சுகாதாரமான முறையில் அழகாகவும் வைத்துக்கொள்ளத் தீவிரக் கண்காணிப்பும் துரித நடவடிக்கையும் மேற்கொள்ளத் தக்க அமைப்பு முனைப்புடன் செயல்பட வேண்டும்.

"வெறும் நிர்வாக உத்தரவுகளினால் மட்டும் இந்த இலட்சியத்தை அடைந்துவிட முடியாது.

"லைசென்ஸ் இல்லாத மாட்டுத் தொழுவங்கள் வைத்திருப்பது நகரை அசுத்தப்படுத்துவது, ஆக்கிரமிப்புகள், கலப்படம் ஆகிய குற்றங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ மூவாயிரம் வழக்குகளை மாநகராட்சி தொடருகிறது. நீதிமன்றத்தில் இவற்றிற்குத் தீர்வு காணப் பல மாதங்கள் ஆகின்றன. மேலும் அவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை சொற்பமானதாக இருப்பதால், எதிர்பார்க்கும் பலன் ஏற்படவில்லை. எனவே நடமாடும் நீதிமன்றம், சுகாதாரப் பாதுகாப்புப் படை ஆகியவை ஏற்படுத்தலாம் என்ற மாநகராட்சியின் யோசனை பாராட்டுக்கும் ஆதரவுக்கும் உரியதாகும்.

"சென்னை நகரிலிருந்து தொலைவில் வெளி இடத்திற்குக் கறவை மாடுகளையும், மாட்டுத் தொழுவங்களையும் அப்புறப்படுத்த வேண்டுமெனும் யோசனை வரவேற்கத்தக்கது. சுற்றித் திரியும் கால்நடைகளால் ஏற்படும் சாலை விபத்துக்கள் தவிர்ப்பு, சுகாதார மேம்பாடு ஆகியவை கருதி இந்த ஏற்பாடு அவசியமாகும்.

**—சென்னை மயிலை ஸ்ரீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் 6-2-76-ல் நகரை அழகுபடுத்தும் இயக்கத்தைத் துவக்கி வைத்துப் பேசியது.**

## பல்கலைக் கழகங்களில் பொதுப் பரீட்சை!

கல்லூரிகளில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வுகளை, நாட்டில் உள்ள எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான தேர்வாக நடத்த வேண்டும்.

இந்தப் பொதுப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுடைய மதிப்பெண்களின் அடிப்படையில் அவர்களைக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளலாம்.


ஒவ்வொரு கல்லூரியிலும் சேரும் மாணவர்கள் பட்டியலையும், அவர்களது மதிப்பெண்களின் பட்டியலையும் பகிரங்கமாக வெளியிடும் படி வற்புறுத்தலாம்.


தமிழ்நாடு கல்வி டிரஸ்ட் அமைக்கும் விடுதிகளில் தகுதி அடிப்படையிலேயே மாணவ, மாணவியர் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். மற்றபடி, மதம், ஜாதி, இனப்பாகுபாடுகள் ஏதும் பார்க்கப்படாது. இந்த விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அவர்கள் படிப்பு முடிந்ததும் வேலைவாய்ப்பு தருவதற்கு தொழில் அதிபர்கள் முன்வர வேண்டும்.

தமிழ்நாட்டின் பல இடங்களில் மாணவிகளுக்காக 4 விடுதிகளையும், மாணவர்களுக்காக 10 விடுதிகளையும், தமிழ்நாடு கல்வி டிரஸ்ட் கட்டியுள்ளது. மாணவிகளுக்காக மேலும் 10 விடுதிகளையும், மாணவர்களுக்காக மேலும் 4 விடுதிகளையும் இந்த டிரஸ்ட் கட்டும்.

விடுதிகளில் இடம் கிடைக்காத மாணவிகளுக்கு உபகாரத் தொகைகள் வழங்கவும், இந்த டிரஸ்ட் திட்டமிட்டுள்ளது. மாணவியர் விடுதிகளை அமைப்பதற்காக எம். ஏ. முத்தையா செட்டியார் ரூ. 13 இலட்சம் நன்கொடை அளித்துள்ளார்.

**[2-2-76-ல் தமிழ்நாடு கல்வி டிரஸ்ட், சென்னை கமாண்டர் இன்சீப் சாலையில் கட்டியுள்ள ராணி மெய்யம்மை மாணவியர் விடுதித் திறப்பு விழாவில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றிய தலைமையுரை].**





# ஊரகச் சீரமைப்புத் திட்டம் வெற்றி பெற உதவிடுக!

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 70 சதவிகிதத்தினர் கிராமங்களில்தான் வாழ்கின்றனர். அந்தக் கிராமங்களின் வாழ்வே நகரங்களின் நல்வாழ்வாகும். இதனை நன்குணர்ந்தே, 'இந்தியாவின் உயிர் நாடி கிராமங்களே' என்றார் காந்திஜி.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, கிராம வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. இப்போது, பிரதமர் இந்திரா அவர்களின் இருபது அம்சப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களிலும் கிராம வளர்ச்சிக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் இந்திரா அவர்களின் இந்தப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கிராமப்புனரமைப்பிற்காக - சென்னையிலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்தில்- செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூர் வளர்ச்சி வட்டாரத்தில் ஸ்ரீபெரும்புதூருக்கும் குன்றத்தூருக்கும் இடையேயுள்ள சோமங்கலம் பகுதியில் 10 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டப்பகுதியின் மொத்தப் பரப்பு 2,500 எக்டேர். இப்பரப்பில் வாழும் மொத்த மக்கள் தொகை 11 ஆயிரம் ஆகும்.

கிராமப்புறப் புனரமைப்பு முன்னோடித் திட்டமான இத்திட்டத்திற்கு ஊரகச் சீரமைப்புத் திட்டம் என்று பெயர். பிரதமர் இந்திராவின் 20 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் இங்கு 6 ஆயிரம் ஏக்கர் நிலம் பயிரிடப்படவும், அப்பகுதியில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தப் பகுதி மக்கள் விவசாயம் தவிர, கூட்டுறவுப் பால் பண்ணைகள், கோழி, மாடு வளர்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்தவும் வகை செய்யப்படும். குழந்தைகள் காப்பகம், சுகாதாரத் திட்டங்கள் ஆகியவைகளும் அமல் நடத்தப்படும்.

சோமங்கலம் ஊரகச் சீரமைப்புத் திட்டத்தின் தொடக்க விழாவையொட்டி, 15-2-76-ல் அந்தப் பகுதி முழுவதும் விழாக் கோலம் கொண்டு விளங்கியது.

பிரதமர் இந்திரா அவர்கள், இத்திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக 15-2-76 காலை 9-45-க்கு 'ஹெலிகாப்டர்' மூலம் சோமங்கலம் வந்து சேர்ந்தார். அவருடன் தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்களும் வந்தார்.

பிரதமர் அவர்கள் ஹெலிகாப்டரிலிருந்து இறங்கியதும், செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் திவான் முகம்மது அவர்கள் மாலையணிவித்து வரவேற்றார். முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களும், திருமதி கே. கே. ஷா அவர்களும் பாராளுமன்ற உறுப்பினர் ஓ. வி. அளகேசன் அவர்களும் வரவேற்றார்கள். விழாவிற்குச் சிறப்பு அழைப்பாளர்களும், சென்னையில் உள்ள வெளிநாடுகளின் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். இந்த விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியை பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

விழாவிற்கு தமிழக ஆளுநர் கே. கே. ஷா. அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தமது தலைமையுரையில், ''வறுமையை ஒழிக்க பிரதமர் அவர்கள் வகுத்த திட்டத்தின் அடிப்படையில்தான் சோமங்கலம் கிராமப் புனரமைப்புத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது'' என்றும், ''இத்திட்டம் அமலாக இருக்கும் பகுதியில், ஒவ்வொரு குடும்பத்தின் வருமானமும் 400 ஆக உயர வேண்டும் என்பது நோக்கம்'' என்றும் குறிப்பிட்டார்.

ஆளுநர் அவர்களின் ஆலோசகர் ஆர். வி. சுப்பிரமணியம் அவர்கள் தமது வரவேற்புரையில், 'இப்பகுதியில் உள்ள இயற்கை, மனித வளங்களை வீடு தோறும் கணக்கெடுத்தபின் இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது'' என்றார்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தமிழில் ''சகோதரிகளே! சகோதரர்களே!'' என்று தமது பேச்சை ஆரம்பித்தபோதும், 'வணக்கம்' என்று பேச்சை முடித்தபோதும் அவையினரிடையே எழுந்த பலத்த கையொலி விண்ணையே அதிரச் செய்யும்படியாக இருந்தது.

தொடர்ந்து பிரதமர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''எனக்கு மிகவும் பிடித்தமான இந்தக் கிராமச் சீரமைப்பு விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.




''ஒரு காலத்தில் தமிழ்நாடு வளர்ச்சி வேகத்திலும் மற்ற அம்சங்களிலும் இந்தியாவிலேயே முதன்மையாகத் திகழ்ந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாகக் கடந்த சில ஆண்டுகளில் அது மிகவும் பின்னடைந்து விட்டது. மிகவும் கீழே இருந்த மற்ற பல மாநிலங்கள் தமிழ்நாட்டை முந்திக் கொண்டு மேலே வந்து விட்டன. ஆகவே இந்த இழப்பைத் தமிழ்நாடு ஈடு கட்ட வேண்டும்.

''ஒரு காலத்தில் ஹரியானா மிகவும் பின்னடைந்த பகுதியாக இருந்தது. ஆனால் அம்மாநில முதல்வரும் அரசாங்கமும் எடுத்துக் கொண்ட பெருமுயற்சிகளின் காரணமாக, இப்போது அது மிகவும் முன்னேறி வந்துவிட்டது. இன்று இந்தியாவிலேயே மிகவும் முன்னடைந்த மாநிலங்களில் ஹரியானா மாநிலம் ஒன்றாக விளங்குகிறது.

''விஞ்ஞானத்தையும் தொழில் நுணுக்கத்தையும் விவசாயிகள் மத்தியில் கொண்டு வருவதற்கான கட்டுக் கோப்பான திட்டம் ஒன்று வேண்டும். அவ்வாறு கட்டுக்கோப்பாக அணுகினால்




தான் விவசாயிகள் முன்னேறு வார்கள். இந்தியாவின் சில பகுதிகளில்-குறிப்பாக ஆந்திரா வில் கரீம் நகர்ப் பகுதியில்-இவ்வாறு கட்டுக்கோப்பான அணுகு முறை செயல்படுகிறது.

''ஆங்காங்கு கிடைக்கும் வளங் களைக் கொண்டு கிராமப் பகுதி களை அபிவிருத்தி செய்யவும், நிருமாணிக்கவும், உருவாக்கவும் விஞ்ஞானிகளும் தொழில் நுணுக்க நிபுணர்களும் முயல வேண்டும். தாம் விரும்பும் அபிவிருத்தி அணுகுமுறை இதுவே. கிராமங் களை அபிவிருத்தி செய்வதற்கு ஆங்காங்கு கிடைக்கும் பொருள் களை அதிகப் பயனுள்ளதாக, வலுவுள்ளதாக ஆக்க விஞ்ஞானத் திறன் பயன்பட வேண்டும்.

''தொழில் மயமாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்றும், அதனல் கிராம அபி விருத்தி வேகமாக நடைபெற வில்லை என்றும் சில வட்டாரங் களில் ஒரு கருத்து இருக்கிறது. இதில் உண்மையில்லை. கனரக, நடுத்தர, சிறுதொழில்களைப் பெருக்காமல் எந்த நாடும் தனது சுதந்திரத்தைப் பாதுகாக்க முடி யாது. ஒரு நிலையான பொரு ளாதார அடிப்படையை அமைக்க முடியாது.

''அதிக உரம் போட்டால் அதிகம் தண்ணீர் வசதி இருந் தால் விளைச்சலும் அதிகமாக இருக்கும் என்ற ஒரு கருத்து விவ சாயிகளிடையே - குறிப்பாக பஞ் சாப், மகாராஷ்டிர விவசாயிக ளிடையே-இருக்கிறது. இரசாயன உரத்தைப் பயன்படுத்த விவ சாயிகள் ஊக்குவிக்கப்பட வேண் டியதுதான். ஆனல் அதை இயற்கை கம்போஸ்ட் உரத் துடன் எவ்வாறு சேர்த்து உப யோகிப்பது என்பதையும் அவர் களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். விவசாயத்துக்குப் பூச்சி மருந்து அவசியமே ஆன லும் அவைகளை அளவுக்கு மீறி உபயோகப்படுத்துவது தீங்கு விளைவிக்கும். இதில் ஒரு சமநிலை காணவேண்டும்.

''கிராமப்புற மக்கள் குறிப் பாக மாதர்களும் இளைஞர்களும் சுத்தத்தையும் சுகாதாரத்தை யும் பேண வேண்டும். குழந்தை களுக்கும் வயதானவர்களுக்கும் நோய் வராமல் தடுப்பது எப்படி என்பதில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு, கிராமப் புறங்களில் உள்ள பொருள்களை எவ்வாறு சிறந்த முறையில் பயன் படுத்தலாம் என்பதையும் கிராம மக்கள் அறிந்திருக்க வேண்டும்.

''இப்போது நாட்டில் உள்ள மக்களுக்குப் போதுமான உணவு உற்பத்தியாகிறது என்பது உண் மைதான். ஆனல் இன்னும் 20 அல்லது 30 ஆண்டுகளில் இது ஒரு பெரிய பிரச்னையாகிவிடும். தமக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் போதிய உணவு, உடை, கல்வி, சுகாதார வசதிகள் பெற உரிமை இருக்கிறது என் பதை ஒவ்வொரு இளம் தம்பதி யும் உணர வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு திட்ட விஷயத்தில் தமிழ்நாடு நல்ல பணி செய்திருக் கிறது என்ருலும் இன்னும் நிறையச் செய்ய வேண்டியிருக் கிறது. குடும்பக் கட்டுப்பாடு விஷயத்தில் பெண்களைவிட ஆண்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும்.


''நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்க 20 அம்சத் திட்டத் தினை அமல்படுத்தியிருக்கிருேம். இந்த 20 அம்சத் திட்டத்தில் எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்துவிட முடியும் என்று நான் கூற விரும்பவில்லை. மற்ற முக் கியத் தேவைகளை நிறைவேற்ற, நாம் ஏற்கெனவே திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிருேம். இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல் பட கிராம மக்களும் அதிகாரி களும் மற்றவர்களும் உதவிட வேண்டும்.''



தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவரின் ஆட்சி செயலுக்குக் கொண்டுவரப்பட்டதால், தமிழக ஆளுநர் அவர்களின் ஆலோசகர்கள் திரு. பி.கே.தவே அவர்களும், திரு. ஆர். வி. சுப்ரமணியம் அவர்களும் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் அவர்களுடனும் மற்றைய உயர் அலுவலர்களுடனும் 1.2.1976 அன்று ஆலோசனை நடத்தினார்கள்.

# படமும் செய்தியும்

தேசிய மாணவர்படை இயக்ககங்களுக்கு இடையில் நடைபெற்ற போட்டிகளில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களைச் சார்ந்த தேசிய மாணவர் படைத் தொகுதியினர் பல பரிசுகளைப் பெற்றமைக்காக அவர்களை மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் 3-2-'76 அன்று உட்லண்ட்ஸில் நடைபெற்ற விழாவில் பாராட்டினர்.






முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சென்னை நகரைத் தூய்மைப் படுத்தும் இயக்கத்தை, 6.2.'76 அன்று சாஸ்திரி மண்டபத்தில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் துவக்கி வைத்தார்.

நேரு நினைவுச் சின்னத்தை மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், திரு. எம். ஏ. எம். ராமசாமி அவர்களிடம் 7.2.'76 அன்று அளித்தார்.







"கணித அறிவியலில் வாழ்க்கை" என்ற கருத்தரங்கில் தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் ஆலோசகரான திரு. ஆர். வி. சுப்பிரமணியம் அவர்கள் 7.2.'76 அன்று உரையாற்றினார்.



தமிழ்நாடு காவல் துறையின் குற்றஞ்சார் அறிவியல் பரிசோதனைக் கூடத்திற்கு 9.2.'76ல் வருகை தந்த ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள், குற்றவாளிகளைக் கண்டறிய உதவும் நவீன எலக்ட்ரானிக் கருவியைப் பார்வையிட்டார்.




முதியோர் ஓய்வு ஊதியத் திட்டத்தின் கீழ், திருவில்லிபுத்தூரில் 9.2.'76 அன்று, மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் வயது சென்ற மூதாட்டி ஒருவருக்கு ஓய்வு ஊதியப் பணம் வழங்கினார்.







காந்தி கிராமத்தில் நடை பெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு 8.2.'76 அன்று மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி. மதுபென்ஷா அவர்கள் பரிசு வழங்கினார்.



இந்திய புவியியல் ஆய்வு நிறுவனத்தால், சென்னை அரசினர் அரும் பொருட் காட்சியகத்தில் "காலங் காலமாக வாழ்க்கை" என்ற கருத்தில் ஓவியங்களையும், காட்சி பொருள்களையும் கொண்டு அமைக்கப் பட்டிருந்த பொருட்காட்சியை 10.2.1976 அன்று மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார்.

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## பொது அறிக்கை

திருவண்ணாமலை மின்திட்டம் திருவண்ணாமலையினைத் தலைமையகமாகக் கொண்டு 1—10—75 முதல் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த செங்கம், திருவண்ணாமலை, போளூர், ஆரணி, செய்யார், வந்தவாசி முதலிய ஆறு வட்டங்களைத் தன்னகத்தே கொண்டதாம். ஒவ்வொரு வட்டத் தலைமையகங்களிலும் மின் கட்டணப் பட்டியல்களை வழங்க ஒவ்வொரு வருவாய்த்துறை அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திருவண்ணாமலை மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் திருவண்ணாமலை (தபால் குறியீட்டெண் 606602) யில் காந்திநகர் ஐந்தாம் தெருவில் 14 கதவிலக்கமிட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தொலைபேசி எண் 757. திருவண்ணாமலை மேற்பார்வைப் பொறியாளரின் இல்லம் காந்திநகர் நான்காவது தெருவில் 20 கதவிலக்கமிட்ட இடத்தில் அமைந்துள்ளது. தொலைபேசி எண் 753.

இத்திட்டத்தில், திருவண்ணாமலை, போளூர், ஆரணி, செய்யார் இவைகளைத் தலைமையகமாகக் கொண்ட நான்கு பராமரிப்புத்துறைக்கோட்டங்களும், திருவண்ணாமலையைத் தலைமையகமாகக் கொண்ட ஒரு கட்டுமானம், வாணிபம் கோட்டமும் அமைந்துள்ளன. பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளையும், குறைகளையும் தொடர்பான அலுவலர்களை அணுகி முறையிட வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

மாதவராவ் பாலிகா
மேற்பார்வைப் பொறியாளர்

இடம் : திருவண்ணாமலை
நாள் : 8—12—75

# திருச்சி மாவட்டக் கூட்டுறவு வினியோக விற்பனைச்சங்கம் லிட்.,

( Regd. 683 )

"வாழ்க கூட்டுறவு" "வளர்க வணிகம்"

## எங்கள் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

*உங்கள் கண்ணோட்டத்திற்கு:*

| | | |
|---|---|---|
| மொத்த உறுப்பினர்கள் | ... | 17,140 |
| பங்கு மூலதனம் | ... | 7.85 இலட்சம் |
| மொத்தக் கிளைகள் | ... | 10 |
| 1 நாள் சராசரி விற்பனை | ... | 0•85 இலட்சம் |
| 1 மாத சராசரி விற்பனை | ... | 0.27 கோடி |
| 1974-75-ம் வருட விற்பனை | ... | 3 கோடி |
| ஊழியர்களின் எண்ணிக்கை | .. | 175 |

*சங்கத்தின் சிறப்பு அங்கங்கள்*

## "அமராவதி" சிறப்பு அங்காடி

கரூர் : மணப்பாறை

சங்கம் நிர்வகிக்கும் தொழிற்கூடம்: "ராக்கோ—பிரஸ்"

*விரைவில் எதிர்பாருங்கள்!*

எங்கள் 'அமராவதி" யை பெரம்பலூரில்

ச. சுந்தரம்
*செயலாளர்.*

பி. பி. கே. ராஜாசிதம்பரம்
*தலைவர்.*

# மக்கள் நலம் காத்தோம்! மகிழ்ச்சிக்கு வித்திட்டோம்!



தமிழ்நாட்டில் மக்களின் நல்வாழ்வைக் காக்க-நோய் நொடியின்றி அவர்களை வாழச் செய்ய வலுவான உடல்பெறச் செய்ய, என்னென்ன சத்துணவு உட்கொள்ள வேண்டுமென அவர்களுக்கு எடுத்துக் கூற-அளவான குடும்பம் அமைத்துக் கொள்ளச் சொல்ல-காலாரா, பிளேக், போன்ற கொள்ளை நோய்களை அகற்ற-காசநோய், தொழுநோய் போன்றவற்றை வேரறுக்கச் செய்ய-தொழிலாள நண்பர்களுக்கு மருத்துவ வசதிகளைப் பெருக்கித் தர-மற்றும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி செய்ய-கிராமப் புறங்களில் அமைந்துள்ள சிற்றூர், பேரூர்களில் எல்லாம் வாழும் மக்களுக்கு அனைத்து மருத்துவ - சுகாதார வசதிகளும் கிடைத்திட, என்னென்ன செய்யப்பட்டுள்ளன? ஒவ்வொரு முனையிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் எவையெவை? இவற்றை அறிந்திட்டால்தானே ஆற்றியுள்ள பணிகளின் அளவும், சிறப்பும் தெரியும்.

தமிழ்நாட்டில் மருத்துவ-நலப் பணிகள், மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவமனைகள் ஆகியவற்றின் வாயிலாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் மக்கள்தொகை 4 கோடியே 21 இலட்சம்! இதில் 2 கோடியே 90 இலட்சம் மக்கள் 13,000 ஊராட்சிகளில்-நாட்டுப் புறங்களில் உள்ள சிற்றூர்கள், குக்கிராமங்கள் ஆகியவற்றிலேயே வாழுகின்றார்கள்!

**அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் :**


மேற்குறிப்பிட்ட ஊராட்சிகளெல்லாம் அடங்கிய 374 ஊராட்சி ஒன்றியங்கள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. நோய் வருமுன் காப்பதற்கான நலத்துறைப் பணிகள்-நோய்வாய்ப்பட்டவர் உடலுக்குப் பொருந்தும்படியான தக்க மருத்துவப் பணிகள், மற்றும் வேறு பல நல்வாழ்வுப் பணிகள் ஆகியவை சிற்றூர்களுக்கு அரசினர் ஆரம்ப சுகாதார நிலையங்களின் வாயிலாகவே கிடைக்கின்றன. பல மைல்கள் கடந்து சென்று, வட்ட மருத்துவமனையை அடைந்தாலன்றி மருத்துவ வசதிகளைக் கிராம மக்கள் பெற இயலாத காலமொன்று இருந்தது! ஆனால் இன்று ஊராட்சி ஒன்றியப் பகுதி ஒவ்வொன்றிலும் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி, ஏழை எளிய மக்களுக்கு மருத்துவ-நலப் பணிகளாற்றி வருகின்றன!

தமிழகத்தில் இப்போது 381 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வீதம் 367 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், ஒவ்வொன்றிலும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வீதம், 7 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், ஆக 381 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன!

இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் தவிர, கிராமப் புற மக்களுக்காக 137 அரசு மருந்தகங்களும், 200 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

**தாய்-சேய் நலப் பணிகள் :**

தமிழகத்திலுள்ள 381 ஆரம்ப சுகாதார நிலையங்களின் பொறுப்பில் தாய்-சேய் நல நிலையங்கள் (2974) கிராம மகப்பேறு நிலையங்களாக (Rural Maternity Centres) இயங்குகின்றன. ஒவ்வொரு நிலையத்திற்கும் ஆண்டு தோறும் ரூ. 200 பெறுமான



டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன், இயக்குநர், மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை.



அளவு மருந்துகளை அரசு வழங்குகிறது. இத்துடன் உள்ளாட்சித் துறையும், நிலையம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 600 பெறுமான மருந்துகளை வழங்குகின்றது.

தாய்-சேய் நலத்திட்டத்தின் கீழ், பேறுகாலத்திற்கு முன்பும், பேறு காலத்தின் போதும், பேறு காலத்திற்குப் பின்பும் தாய்மார்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு உரிய வயதில் தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. சத்துணவு கல்வி அளிக்கப்படுகிறது. தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தேவைக்குத் தக்க சத்துணவும் வழங்கப்படுகிறது.

நகர்ப்பகுதிகளில் வாழும் மக்களுக்கான தாய்-சேய் நலப் பணிகளை நகராட்சிகளின் கீழ் இயங்கும் 370 மகப்பேறு நிலையங்கள் ஆற்றிவருகின்றன.

சில நகராட்சிகள் பேறு காலம் பார்க்கும் மகப்பேறு விடுதிகளை நடத்துகின்றன. தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட மகப் பேறு விடுதிகள் 125 செயல்பட்டு வருகின்றன.

பள்ளிச் சிறுர்களின் நலம் பேண வேண்டி, பள்ளி நல்வாழ்வுப் பணிகள், (School Health Services) ஆசிரியர்கள், பெற்ருேர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி ஆற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், பள்ளிச் சிறுர்கள் பரிசோதிக்கப்பட்டு, அவசியமானல் சிகிச்சையும் பெறுகிருர்கள். 1965-ல் துவக்கப்பட்ட இத்திட்டச் செயலாக்கத்திற்கென 12 பள்ளிச் சுகாதாரப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டனர். பின் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களும், 74-75, 75-76 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அடுத்த 25 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டதுடன், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ், 677 பள்ளிகளுக்குச் சுகாதாரக் கழிவறைகள் கட்டித் தரப்பட்டுள்ளன. ஐந்து நகர்ப்புறப் பகுதிகளிலும் இப்பணி ஆற்றப்பட்டு வருகிறது.

நல்வாழ்வுக் கல்வியில் (Health Education) 1971-ஆம் ஆண்டு முதல் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது வரை 363 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

**சத்துணவுத் திட்டமும், கலப்படத் தடுப்புத் திட்டமும்:**

சத்துணவுத் திட்டத்தின் அவசியத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்வது மிக முக்கியப் பணியாகும். தாய்-சேய் நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு வரும் தாய்மார்களிடையேயும், பள்ளிகளிலும், தொழிலாளர்களிடையேயும் சத்துணவு பற்றி விளக்கம் அளிக்கப்படுகிறது. மாநில சத்துணவு ஆராய்ச்சிக் கூடம், மிகக்குறைந்த செலவில் அடங்கும் சத்துணவுகளைத் தயாரித்து, மக்களிடையே அறிமுகப்படுத்துகிறது.

தமிழ்நாட்டில் எந்தப் பகுதி மக்களுக்கு என்ன சத்துணவுக் குறைபாடு என்பதை ஆய்வு நடத்தி அறிந்து சொல்வதோடு, அக்குறைகளைப் போக்க நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. இவ்வாண்டு கிராமப்புறங்களில் உள்ள இரத்த சோகையைப்பற்றி ஆய்வு நடத்தப்பட்டது.

உணவுக் கலப்படத்தால் சமுதாயம் பாதிக்கப்படக்கூடாது என்பதில் அரசு மிகுந்த அக்கறைகாட்டி வருகிறது. உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் தமிழ் நாட்டில் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் சற்றேறப்ப 25,000 உணவு மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. அரசு இதில் மிகுந்த அக்கறை காட்டுகிறது. மதுரை, தஞ்சை, சேலம், பாளையங்கோட்டை ஆகிய நான்கு இடங்களில் புதிய ஆய்வுக் கூடங்களை அரசு அமைத்துள்ளது என்பதும், விரைவில் அவை இயங்க இருக்கின்றன என்பதும், குறிப்பிடத்தக்கது, **1975 ஜூன் திங்கள் இறுதி வரை 2,04,901 உணவு மாதிரிகள் சோதிக்கப்பட்டு, 44,530 கலப்படம் செய்யப்பட்டவை எனக் கண்டுபிடிக்கப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டது. அவ்வகையில் அபராதமாக 40.14 இலட்சம்** ரூபாய் வசூலானது.

**பெரியம்மை நோய் ஒழிக்கப்பட்டது:**

பெரியம்மை நோய் வராமல் தடுக்க அரசு தீவிரப் பணிகளை மேற்கொண்டது. அம்மைப்பால் வைப்பதில் முனைப்புப்பணிமேற்கொள்ளப்பட்டது. இதற்காக அம்மைப்பால் வைக்கும் பணியாளர்கள் (Vaccinators) 450 பேர்களும், 132 சுகாதார ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டனர். 1969-லேயே பெரியம்மை நோய் தமிழ்நாட்டில் அறவே ஒழிக்கப்பட்டு விட்டது. இந்நோய் ஏற்படாமல் தடுக்க மேலும் 55 சுகாதார ஆய்வாளர்களும் அம்மைப்பால் வைக்கும் பணியாளர் 199 பேர்களும் 1972 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டனர். இவற்றையும் மீறி பெரிய அம்மை நோய் ஏற்படுமானுல், அதனுல் பாதிக்கப்பட்டோரை முதன்

முதலாகக் கண்டறிந்து சொல்வோருக்கு ரூ. 1000/- அன்பளிப்பு அளிப்பதாக அரசு அறிவித்துள்ளது. இது மக்களுக்கு அம்மை நோய் ஏற்படாமல் தடுக்க அரசு எத்தனை அக்கறையோடு செயல்படுகிறது என்பதை விளக்கும்.

**கொள்ளை நோய்கள் தடுப்புத் திட்டம்:**

காலரா, மலேரியா பிளேக் போன்ற கொள்ளை நோய்களை ஒழித்திடத் திட்டமிட்ட முனைப்பான பணிகள் இங்கு ஆற்றப்பட்டு வருவதின் காரணமாக இந் நோய்கள் கட்டுக்கடங்கி இருக்கின்றன, என்று கூறலாம். சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாத்தால், காலரா நோய் ஏற்படாமல் தடுக்கலாம். இதன் அடிப்படையில் கிராமப் புறங்களில் கழிவறை அமைக்கும் திட்டம் (Rural Latrine Construction) 22 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பரிசோதனை அடிப்படையில் செயல்படுத்தபடுகிறது. நல்வாழ்வுக் கல்வியின் மூலம் இது பற்றி விரிவாக எடுத்து விளக்கப்பட்டு வருகிறது. இதற்காக 1973-74, 74-75 ஆகிய ஆண்டுகளில் 6.4 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டது. 1975 76-ல் 5 இலட்ச ரூபாய் செலவில் இப்பணி ஆற்றப்பட்டு வருகிறது.

மலேரியா நோய் ஒழிப்புத் திட்டமும் செம்மையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிளேக் நோய் தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்குப் பணிகளாற்றப்பட்டு வருகின்றன

இவையன்றி யானைக்கால் நோய் பரவாமல் தடுக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் எங்கெங்கு யானைக்கால் நோய் நிலவியிருக்கிறது என்பது பற்றி ஆய்வு நடத்த வேண்டும். இதனைக் கட்டுப்படுத்த மருத்துவப் பணியாளர்கள் அடங்கிய குழுக்கள் (Fibria Control Unit) பணியாற்றி வருகின்றன. 1966-க்கு முன்பு அப்படிப்பட்ட குழுக்கள் 4 செயல்பட்டன. இப்போது 12 குழுக்கள் செயல்படுகின்றன. இந்நோய் தொடர்பான 'இரவு நேர சிகிச்சை நிலையங்கள்' (Night Clinics) 27 திறக்க அரசு உத்தேசித்துள்ளது.

நரம்புச் சிலந்தி என்ற நோய் விழுப்புரம், திருக்கோவிலூர், போளூர், பவானி, நத்தம், மதுரை, செந்துரை ஆகிய ஊர்களைச் சுற்றியுள்ள கிராமங்களில் பரவலாக இருந்து வருகிறது. இந் நோயைத் தடுப்பதற்காக ஆறு மருத்துவக் குழுக்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

**மேற்குறிப்பிட்ட அனைத்து நலத் துறைப் பணிகளுக்கும் 1974-75 வரை, ஐந்தாண்டுத் திட்டத்தின் பாற்படாத செலவாக ரூ. 5,47,10,000 செலவிடப்பட்டிருக்கிறது. இந்திய அரசிடமிருந்து ரூ. 12,33,93,000 உதவித் தொகையாகக் கிடைத்து செலவிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் ரூ. 37.98,65,000 செலவாகி இருக்கிறது.**

**காச நோய்த் தடுப்புத் திட்டம்**

கிராமங்களில் வாழும் மக்களுக்கு அவர்களது இல்லங்களுக்கு அருகிலேயே சிகிச்சை அளிக்க வாய்ப்பு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி மாவட்டம் தோறும் மாவட்டக் காச நோய் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் அந்தந்த மாவட்டத்திலுள்ள எல்லா இதர மருத்துவமனைகளிலும் புதிய நோயாளிகளைக் கண்டு பிடிக்கவும் சிகிச்சை அளிக்கவும் மருந்துகள் வழங்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. காசநாய்த் தடுப்பு மருந்தான 'பி.சி.ஜி.'யை 20 வயதுக்குட்பட்டோருக்கு அளிக்க சுகாதார ஆய்வாளர்கள் அடங்கிய குழு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிலையம் தவிர சில முக்கிய தாலுகா நகரங்களிலும் காச நோய்க்கெனத் தனி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் காசநோய்ச்சிகிச்சை கிராமங்கள் வரை சென்றடைய ஏதுவாகிறது.

**தமிழ்நாட்டில் காச நோய்க்குள்ளானவர்கள் எனக் கண்டறியப் பெற்றோர் 4,94,752 பேர்கள். இதுவரையில், நோய் நீங்கி குணம் பெற்றவர்கள் 99,699 பேர்கள்- காச நோய் தடுப்பு ஊசியான பி.சி.ஜி. ஊசி போட்டுக் கொண்ட 20 வயதுக் குட்பட்டோர் 72,57,762 பேர்கள். அவர்களில் குழந்தைகள் 4,78,586 பேர்களாவர்!**

பொதுமக்களிடையே ஆண்டு தோறும் செய்யப்படும் காச நோய் முத்திரை விற்பனையில் தமிழ்நாடு



**இந்தியாவிலேயே மிகப் பெரிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது. காசநோய் முத்திரை விற்பனைப் பணியில், இந்தியாவிலேயே முதலிடம் பெற்று, ஆண்டுதோறும் தொடர்ந்து முதல் பரிசைப் பெற்று வருகிறது தமிழ்நாடு என்பது அனைவரும் பெருமைபடத் தக்கதாகும்.**

## புற்றுநோய்த் தடுப்பு

துவக்கத்திலேயே புற்றுநோய் இருப்பதைக் கண்டுபிடிக்கும் முறைகள், சீரிய சிகிச்சை அளிப்பது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட, புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தை உரு



வாக்க, 23-3-69-ல் திறக்கப் பெற்ற 'அறிஞர் அண்ணு நினைவு புற்று நோய் நிலையம்', காஞ்சியில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையத்தில் பெண்களுடைய கருப்பையில் நேரிடும் புற்று நோயை அதன் ஆரம்ப நிலையில் கண்டு பிடிக்கவும், அறுபது வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலருக்கும் ஏற்படும் வாய்ப் புற்று நோயைத் துவக்கத்திலேயே கண்டு பிடிக்கவும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையத்திற்கு உலக சுகாதார நிலையமும், நார்வே நாட்டு உதவி நிறுவனமும் நிதி உதவி அளிப்பதோடு இந்நிலையப் பணியாளர்கள் வெளிநாட்டுப் பயிற்சி பெற உதவுகிறது. அவ்வப்போது நிபுணத்துவம் பெற்ற வெளி நாட்டு ஆலோசகர்களையும் அனுப்பி உதவுகிறது.

நுண் உயிரியல் பள்ளி, சமூக விஞ்ஞானம், சுகாதாரக் கல்வி, புள்ளி விவரம் முதலிய பிரிவுகளைக் கொண்ட இப் புற்றுநோய் நிலையத்திற்குத் தமிழ்நாடு அரசு ஏற்கனவே 10.04 இலட்சம் ரூபாய் செலவிட்டுள்ளது. நடைமுறைச் செலவினங்களுக்கு ஆண்டுதோறும் 3 இலட்சம் ரூபாயையும் செலவிட்டு வருகிறது. இந்நிலையத்துடன் இணைந்த 350 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்துவ மனையை, காஞ்சிக்கருகேயுள்ள காரைப் பேட்டையில் கட்ட அரசு ஆவன செய்து வருகிறது. இதுவரை 250 படுக்கைகள் கொண்ட புற்று நோய் மருத்துவ மனை கட்ட தமிழ்நாடு அரசு 42.02 இலட்ச ரூபாயை அனுமதித்துள்ளது. இறுதியில் இம் மருத்துவமனை 350 படுக்கைகளை உடையதாக்கப்படும்.

மத்திய அரசு, புற்றுநோய் மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கேற்ப அமைக்கவிருக்கும் 11 மண்டலங்களுள்ஒன்றுகத் தன் நிலையை உயர்த்தி இந்நிலையமும் இடம் பெறும்! காலப் போக்கில் தென் கிழக்கு ஆசியாவில் ஒரு மாதிரி மண்டலப் புற்று நோய் மையமாக ஆகும் வாய்ப்பும் இந் நிலையத்திற்கு இருக்கிறது.

## தொழுநோய்த் தடுப்புத் திட்டம்

தொழு நோய் நீண்ட நெடுங் காலமாகத் தமிழகத்தில் நிலவி வரும் நோயாகும். இந்நோயுள்ள கிராம மக்களுக்கு நடமாடும் மருந்தகம் மூலம் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இப்படிச் சிகிச்சை பெறத் தொழுநோய்ப் பணியாளர்கள் கிராமப்புறங்களில் இருந்து பணியாற்றி அம் மக்களுக்கு உதவுகிறுர்கள்.

## மருந்துகளின் தரம் பேணிப் பாதுகாக்கும் பணி

1940-ஆம் ஆண்டில் நிறைவேறிய மருந்துக் கட்டுப்பாடுச் சட்டம் (The drugs and Costmetics act—1940) தமிழ்நாட்டில் 1947-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பணியின் மூலம் மருந்துகளின் தரம் குறையாமல் இத்துறை கண்காணிப்பு நடத்தி வருகிறது. மருத்துவமனைகள், மருந்துக் கடைகள் ஆகியவற்றிலிருந்து பொதுமக்களுக்குக் கிடைக்கும் மருந்துகள் கோளாறு எதுவும் இல்லாதவையாய்-தரத்தில் சிறந்தவையாய் இருக்கின்றனவா என்பதை இத்துறை கண்கணித்து உதவி வருகிறது.

இப் பணியைத் திறம்பட நடத்துவதற்காகப் பணியாளர்களைத் தமிழ்நாடு அரசு அதிகரித்தது. 1967-ல் தமிழ்நாட்டில் 5 முதுநிலை மருந்து ஆய்வாளர்களும், 14 மருந்து ஆய்வாளர்களும் பணியாற்றினர். நல்வாழ்வு குடும்ப நலத்துறை இயக்குநரின் கீழ் உதவி இயக்குநர் ஒருவர் பணியாற்றினுர்.

1970-ஆம் ஆண்டில்45 மருந்து ஆய்வாளர்களும், 5 முதுநிலை மருந்து ஆய்வாளர்களும் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். மாநில மட்டத்தில் 1972-ஆம் ஆண்டில் துணை இயக்குநர் ஒருவரும், உதவி இயக்குநர் ஒருவரும் கூடுதலாக நியமிக்கப்பட்டனர்.

1972-ஆம் ஆண்டில், மருந்து தயாரிப்பதில் ஒருபெரும் மோசடி கண்டு பிடிக்கப்பட்டு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. உரிய விலைக்கு மேல் அதிக விலைக்கு மருந்துகளை விற்றேர் கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். தமிழ் நாட்டில் தயாரிக்கப்படும் மருந்துகளின் தரம் இத்துறையின் பணியால் உயர்ந்திருக்கிறது என்றே சொல்லலாம். மருந்துகளை ஆய்வு செய்வதற்கான இப்போதைய ஆய்வுக் கூட வசதிகள் போதாததால் 20 இலட்ச ரூபாய் செலவில் எல்லா வசதிகளும் கொண்ட முழுமையான ஆய்வுக் கூடம் ஒன்றைக் கட்டி முடிக்க அரசு அனுமதித்துள்ளது. முதல் மாடி வரையிலான கட்டட வேலைகள் இப்போது முடியும் தறுவாயிலிருக்கின்றன.

இத்துறைக்கான 1968-69 ஆண்டுச் செலவு 2.32 இலட்ச ரூபாய்! நடப்பு 1975-76 ஆண் ஆண்டுக்கான நிதி நிலை ஒதுக்கீடு ரூ. 12,86,000- இதிலிருந்து இத் துறையின் செயல் திறத்தை—செயல்வேகத்தை அரசு உயர்த்தியிருக்கிறது என்பதும், அதனுல் பொதுமக்களுக்குப் பெரும் நன்மை ஏற்பட்டுள்ளது என்பதும் தெளிவு!

## தொழிலாளர் காப்புறுதித் திட்டம்

தொழிலாளர்களின் நலனில் அக்கறையும் ஆர்வமும் காட்டி வரும் தமிழ்நாடு அரசு—நிருவாகத்தில் அரசு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தரத்தில் உயர்வான மருத்துவ வசதியைத் தொழிலாளர்களுக்கு நல்கி வருகிறது. இருபதும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் பணியாற்றும் தொழிற்சாலைகளுக்கு இத்திட்டம் பொருந்தும். இதுவரை ரூ. 500- வரை சம்பளம் பெறும் பதிவு செய்து கொண்ட தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வசதி வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டு வந்தன. 1-12-1975 முதல் ரூ. 1000- வரை சம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தை அரசு விரிவாக்கியுள்ளது. பதிவு செய்து கொண்ட தொழிலாளர்கள் மட்டுமல்லாது அவர்களது குடும்பத்தினரும் இத்திட்டத்தால் பயன்பெறும் திட்டம் சென்னை, மதுரை, கோவை, கோவில்பட்டி ஆகி பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

1968-ஆம் ஆண்டு முதல் 1974-75-ஆம் ஆண்டு வரை இத்திட்டத்திற்கென செலவிடப்பட்ட தொகை ரூ. 2,231.27 இலட்சங்கள்! இதில் தொழிலாளர் காப்புறுதித் திட்டக் கழகம் கொடுத்துதவிய நிதி ரூ. 1635.52 இலட்சங்கள். தொழிலாளர் நலன் கருதி தமிழ்நாடு அரசு தன் நிதி ஆதாரங்களிலிருந்து செலவிட்டது ரூ. 595.75 இலட்சங்களாகும்.

## பொது மருத்துவ வசதிகள்


மருத்துவ வசதிகளைப் பெருக்குவதற்காக ஆண்டு தோறும் அரசு பல்வேறு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்துள்ளது. மாவட்ட மருத்துவ மனைகளில், நோயாளிகள் தங்குவதற்கான படுக்கைகளின் எண்ணிக்கை வெகுவாகஉயர்த்தப்பட்டுள்ளது.

1967-68-ல் அதிகப்படியாக 80 படுக்கைகளை அமைத்துக்கொள்ளவும், 1968-69-ல் 102 படுக்கைகளைக் கூடுதலாக்கிக் கொள்ளவும் 1969-70-ல் 40 படுக்கைகளை அதிகமாக்கிக் கொள்ளவும் 1971-72ல் 330 படுக்கைகளையும், 1972-73-ல் 500 படுக்கைகளையும், 1973-74-ல் 544 படுக்கைகளையும், 1974-75-ல் 346 படுக்கைகளையும் அதிகப்படியாக அமைத்துக் கொள்ளவும் அரசு ஆணைகள் பிறப்பித்தது.

தாம்பரம், பரமக்குடி, சிதம்பரம், கலவை, திருத்தணி, திருப்பூர், பாலடா (நீலகிரி), கொப்பறைப்பட்டி, துறையூர், பவானி திருப்பத்தூர் (முகவை மாவட்டம்), செங்கம், கம்பம், ஒசூர், புதுமம், தானிப்பாடி, திருமயம், ராசபாளையம், அன்பில், குளித்தலை ஆகிய இடங்களில் புதிய மருத்துவமனைகள் நிறுவப்பட்டன. ஏற்கனவே உள்ள மருத்துவ மனைகளில் புதிய மேல் நிலைத் தொட்டிகள், பிரசவவிடுதிகள், அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், ஆகியவை பற்பல இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

53 மருத்துவமனைகளுக்கு 100 (M.A.) வலுவுள்ள ஊடுகதிர் (X-ray) கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றின் மதிப்பும் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் ஆகும். இதயத் துடிப்பினைக் கணக்கிடும் கருவிகள் இருபது மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1971-ஆம் ஆண்டுக்குப் பின்னர் 12 இடங்களில் குருதி சேமிப்பு நிலையங்களும், 71 பல் சிகிச்சை நிலையங்களும், 7 முடநீக்குப் பிரிவுகளும், 5 கண்சிகிச்சைப் பிரிவுகளும், காது மூக்குத் தொண்டை சிகிச்சைப் பிரிவுகள் நான்கும், பால்வினை சிகிச்சைப் பிரிவுகள் (V. D.) ஆறும், குழந்தைகள் நலப்பிரிவுகள் இரண்டும் மனநோயியல் பிரிவுகள் நான்கும் நிறுவப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி சிகிச்சைகளுக்கு இன்றியமையாத பரிசோதனைக் கூடங்கள் (District Public Health Laboratory), மாவட்ட அளவில் தூத்துக்குடி, ஊட்டி, தர்மபுரி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. கோவையில் மிகப் பெரிய சோதனைக் கூடம் (Principal Laboratory) நிறுவப்பட்டது. இக்கூடத்தில் சிகிச்சைக்குரிய பரிசோதனைகள் மட்டுமின்றி கலப்பட உணவு, குடிநீர் ஆகியனவற்றை ஆராயும் வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.



இதயக் கோளாறுகளுக்கு இங்கே சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மாவட்ட மருத்துவமனைகளில் இருதயக் கோளாறுகளுக்காக தீவிர சிகிச்சை அளிக்கும் (Intensive Caronory Care Unit) முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு அத்தகைய சிகிச்சைப்பிரிவு ஒன்று 1975-ல் நிறுவப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் மருத்துவம், மகப்பேறு, அறுவைச் சிகிச்சை ஒவ்வொரு பிரிவிலும் பட்டமேற்படிப்புத் தகுதியை உடைய சிறப்பு மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் 1974-ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டது.

கிராமப்புற மக்களின் மருத்துவ வசதிகளை அதிகரிக்கும் வகையில் பஞ்சாயத்து ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வரும் மருந்தகங்களைப் படிப்படியாக அரசு மேற்கொள்ளவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1969-ஆம் ஆண்டு முதல் 102 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மேற்கொண்டுள்ளது.

மருத்துவத் துறைப்பணிகளால் மக்கள் விழுமிய பயனை எய்த வேண்டுமென்ற பெரு நோக்கில் இத்துறை வளர்ச்சிக்கென அரசு ஏராளமான நிதி ஒதுக்கி ஆவன செய்து வருகிறது. 1974-75ம் ஆண்டு இதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 11·79 கோடியாகும்! அரசு இத்துறைக்கான செலவினத்தை ஆண்டுதோறும் பெருக்கி மக்களது நல்வாழ்வு சிறக்க ஆவன செய்துள்ளது.


தமிழ்நாடு அரசு அமைத்த மாநிலத் திட்டக்குழு, ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனையும் குறைந்தது 400 முதல் 650 படுக்கைகள் கொண்டதாக இருக்க வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரைக்கிணங்க தர்மபுரி, நாகப்பட்டினம், நாகர்கோவில் ஆகிய மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் கூடுதலான படுக்கைகள் அமைக்கும் வகையில் புதிய கட்டிடங்கள் கட்டும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வு - குடும்பநலத்துறை மட்டிலா ஆர்வத்துடனும், குன்றா நிறைவுடனும், சீராகவும் செப்பமாகவும் செயல்பட்டு வருகிறது.

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினுல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ரும். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரிவிதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

**இதோ சில முக்கிய விவரங்கள்**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002**

# சிறு தொழில் வளர்ச்சிக்கு உதவும்



# 'சிட்கோ'

"சிட்கோ" என்று சுருக்கமாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக்கழகம் 1970-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ஆம் நாள் தொடங்கப்பெற்று பின்னர் 1971-ஆம் ஆண்டு சனவரி 20-ஆம் நாள் பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது.

தமிழகத்தில் சிறு தொழில்களைப் பேணிக் காக்கவும், புதுப் புதுத் தொழில்களைத் தோற்றுவிக்கவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் கீழ்க்காணும் சீரிய நோக்கங்களைக் கொண்டு 'சிட்கோ' பெரும் பணியாற்றி வருகின்றது:

1. சிறு தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களைச் செவ்வனே கொள்முதல் செய்து பின்னர் சிறு தொழில்களிடையே சீரான வினியோகத்தை மேற்கொள்ளுதல்.

2. சிறு தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களை எளிய தவணை முறைக்கடன் திட்டத்தில் வழங்குதல்.

3. சிறு தொழில்கள் தொடங்கத் தொழில் நுணுக்க அறிவுரை வழங்குதல், புதிய தொழில்கள் தொடங்கத் தொழில் நுட்பத் திட்ட அறிக்கை தயாரித்து வழங்குதல் ஆகியவை.

4. தவணைமுறைக்கடன் திட்டத்தில் சிறு தொழில்களுக்குத் தொழிற்கூடங்கள் கட்டிக்கொள்ளவும், கட்டித்தரவும் வகை செய்தல்.

5. சிறு தொழில்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல்.

6. சிறு தொழில்களுடைய இறக்குமதி உரிமங்களை ஒன்று திரட்டி, 'சிட்கோ' வழியாக மூலப் பொருள்களை மொத்தமாக இறக்குமதி செய்து தொழிலகங்களுக்கு வழங்குதல், ஏற்றுமதி வளர்ச்சி ஆகியவை.


தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இயங்கத் தொடங்கியது. இந்த நிறுவனம் சிறு தொழில்களுக்கு வேண்டிய பல பணிகளைச் செய்து கொண்டு வருகின்றது. 1973-74-ஆம் ஆண்டில் மட்டும் ஐந்து கோடியே எழுபத்தாறு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள இரும்பு மற்றும் இதர மூலப் பொருட்களை வினியோகம் செய்துள்ளது. கடந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதத்திலேயே ஆறு கோடியே இரண்டு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரம் ரூபாய் மதிப்புள்ள இரும்பு மற்றும் இதர மூலப் பொருட்களை வினியோகம் செய்து கடந்த ஆண்டின் வினியோகத்தையும் விஞ்சிவிட்டது.

இந்த ஆண்டில் சுமார் 225 மெட்ரிக் டன் பொட்டாசியம் குளோரேட்டை இறக்குமதி செய்து சிறுதொழில் தீப்பெட்டித் தொழில்களுக்கு வினியோகம் செய்ய அரசு வர்த்தகக் கழகத்துடன். (State Trading Corporation ) ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. இதே போன்று 'என்றைன்' (Endrine) மட்டன்டாலோ, பாம் ஆயில் ( Palm Oil ) போன்ற கிடைத்தற்கரிய மூலப்பொருட்களை வினியோகம் செய்ய அரசு வர்த்தகக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்ய முனைந்து வருகிறது.

சிறுதொழில் முனைவர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவியாக இர்மாக் (Industrial Raw Material Assistance Centre) என்ற திட்டத்தைத் தொடங்கி இருக்கிறது. சுமார் பத்து இலட்ச ரூபாய்க்குப் பொது நாணயப் பகுதிகளிலிருந்தும் மற்றும் இருபத்தைந்து இலட்ச ரூபாய்க்குப் பணமாகச் செலுத்தக் கூடிய பகுதிகளிலிருந்தும் இத்திட்டத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இறக்குமதி அனுமதிச் சான்றிதழ்களைப் பெறுகிறது. இந்த அடிப்படையில் ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் சிறு


# டான்சியின் எழில் படைப்புகள்!

காலத்தை வெல்லும் டான்சியின் தயாரிப்புகள் மர மற்றும் எஃகு சாதனங்கள் டான்சியின் மேன்மையான படைபபுகள். நாளைய வடிவமைப்புகளில் இன்றே வழங்கப்படும் இச்சாதனங்கள் நீடித்து உழைப்பவை, நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள், கட்டில்கள் முதலிய பறபல எழில்மிகு தயாரிப்புகளை வழங்குவது டான்சி.



**டான்சி**

தமிழ்நாடு சிறு
தொழில் நிறுவனம்,
26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014



தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் தங்கு தடையின்றிக் கிடைக்கும்படி செய்ய முடியும். இதனால் சிறு தொழில்கள் தங்களுக்கு வேண்டிய மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதில் ஏற்படக் கூடிய காலதாமதம் தவிர்க்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலீட்டு நிறுவனத்திடம் கொண்டுள்ள கூட்டுத் திட்டம் இந்த நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். இந்த நிறுவனம் ஆரம்ப காலத்திலிருந்து சிறு தொழில்களுக்குத் தவணை முறைத் திட்டத்தின் கீழ் இயந்திரம் வாங்கவும், தொழிற்கூடங்கள் அமைக்கவும் நிதி உதவி அளித்து வந்தது. இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த முடியாமல் கடுமையான நிதித் தட்டுப்பாடு ஏற்பட்டது. எனவே, ஏப்ரல் திங்கள் 1974-ஆம் ஆண்டிலிருந்து சிறுதொழில் முனைவர்களுக்கு இயந்திரங்கள் வாங்கவும் தொழிற் கூடங்கள் அமைக்கவும் நன்மை தரும் கூட்டுமுறையை ஏற்படுத்தியது. இத்திட்டத்தின் எல்லாத் தொழில் முனைவர்களுக்கும் இயந்திரங்கள் வாங்கவும் தொழிற் கூடங்கள் அமைக்கவும் 90 சதவிகித நிதி உதவியும், தொழில் வல்லுநர்களுக்கு 100 சதவிகித நிதி உதவியும் வழங்கப்படுகிறது.

இதே திட்டத்தில் முன்பு இந்த நிறுவனம் பதினான்கரை வட்டி சதவீதமும், மூன்று சதவீத பணிக் கட்டணமும் வசூலித்து வந்தது. கடன் தொகையையும் ஆறு ஆண்டுகளில் ஓராண்டு இடைவெளிக்குப் பின் திருப்பிச் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் இந்தப்புதிய கூட்டுத்திட்டத்தில் வட்டியோ பின்தங்கிய பகுதிகளுக்கு ஒன்பதை சதவிகிதமும் இதர பகுதிகளுக்குப் பத்தரை சதவீதமுமேயாகும். கடன் தொகையை இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு பத்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தலாம்.

**சிட்கோவினால் சிறு தொழில்களுக்கு விற்பனை செய்யப்பட்ட மூலப்பொருட்களின் மதிப்பு**

| ஆண்டு | மதிப்பு ரூ. லட்சம் |
|---|---|
| 1970 அக்டோபர் முதல் 1971 மார்ச் வரை | 106.58 |
| 1971—72 | 379.19 |
| 1972—73 | 417.89 |
| 1973—74 | 576.10 |
| 1974—75 | 726.25 |

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், மத்திய அரசால் ஒரு ஏற்றுமதி நிறுவனமாகப் பதிவும் பெற்றுள்ளது. மேலும், அது தனது ஏற்றுமதிப் பிரிவை வலுப்படுத்தவும் நாட்டிலுள்ள சிறுதொழில்களின் உற்பத்தியைப் பொருள்களின் ஏற்றுமதியைப் பெருக்க மேலைநாடுகளின் தொடர்பை வளப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது.

**1. உள் நாட்டு மூலப் பொருள்**

பலதரப்பட்ட இரும்பு மற்றும் எஃகுப் பொருள்கள், துத்தநாகம், கால்சியம், காஸ்டிக் சோடா, சுட்ட நிலக்கரி போன்ற கட்டுப்படுத்தப்பட்ட, கிடைத்தற்கரிய உள்நாட்டு மூலப் பொருள்களை 'சிட்கோ' நிறுவனம் கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. சிறு தொழிலகங்களுக்கான பலதரப்பட்ட இரும்பு மற்றும் எஃகுப் பொருள்களின் மாநிலத் தேவையை இணைதொழில் குழுவின் ( Joint Plant Committee ) ஒதுக்கீட்டின் மூலமும் இந்துஸ்தான் லிமிடெட், டாடா இரும்பு எஃகு லிமிடெட் போன்ற உற்பத்தியாளர்களின் மூலப் பொருள் கிடங்குகளிலிருந்து கொள்முதல் செய்தும் இரும்பு மற்றும் எஃகுப்பொருள்கள் 'சிட்கோவில்' பதிவு செய்துள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு 'சுழற்சி முறை' மூலம் விநியோகிக்கப்படுகின்றன. துத்தநாகம் கால்சியம், காஸ்டிக் சோடா, நிலக்கரி, சுட்ட நிலக்கரி ஆகிய இதர மூலப்பொருள்கள் தொழில் வணிகத்துறை இயக்குநரின் ஒதுக்கீட்டின்படி சிறு தொழில் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

*சோடாகாரம்: 31-3-74* வரை *9.53* இலட்சம் மதிப்புள்ள *636* மெட்ரிக் டன் சோடாகாரம் விநியோகிக்கப்பட்டது. *1-4-74* முதல் *31-12-74* வரை ரூ. *6.91* இலட்சம் மதிப்புள்ள *333.309* மெட்ரிக் டன் விநியோகம் செய்துள்ளது.

**உள்நாட்டுத் துத்தநாகம்: 31-3-74 வரை 13.32 இலட்சம் மதிப்புள்ள 191 மெட்ரிக் டன் சுதேச துத்தநாகம் விநியோகிக்கப்பட்டுள்ளது. 1-4-74 முதல் 31-12-74 வரை ரூ. 15.00 இலட்சம் மதிப்புள்ள 92,486 மெட்ரிக்**

**கடன் தவணைமுறையில் சிறு தொழில்களுக்கு இயந்திரங்கள் வழங்குவதில் சிட்கோவின் சாதனை**

| | 1-10-70 முதல் 31-3-71 | 71-72 | 72-73 | 73-74 | 74-75 |
|---|---|---|---|---|---|
| பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை | 11 | 154 | 401 | 569 | 268* |
| மதிப்பு ரூ. லட்சம் | 7.62 | 75.91 | 173.11 | 232.76 | 334.09 |

இதில் 206 யூனிட்டுகள் (ரூ. 304.14 இலட்சம்) சிட்கோ-டி.ஐ.ஐ.சி கூட்டுமுறையின்கீழ் உதவிபெற்றவை.

# சிறு தொழில் துறையில்
# தமிழ்நாடு முக்கிய இடம் பெற்றுள்ளது.

குறைந்த காலத்திற்குள்ளாகவே தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் பல்வேறு சிறு தொழில் துவங்குபவருக்கும், சிறப்பாகவும், விரைவாகவும் வேண்டிய உதவிகளைப்புரிந்துவரும் சக்தியாகச்-செயல்படுகிறது என்பது அறியக்கிடப்பதாகும்.

'சிட்கோ'வின் வளர்ச்சிப் பட்டியல் சிறப்பினைக் காணீர்:

வழங்கப்பட்ட மூலப்பொருட்களின் மதிப்பு 1970-71-ல் ரூ. 105.38 லட்சமாக இருந்தது, 1974-75-ல் ரூ. 602.43 லட்சமாக உயர்ந்தது. 1970-75-ல் மொத்த மதிப்பு ரூ. 2081.21 லட்சம். வாடகைக் கொள்முதல் திட்டத்தின்படி, 1974-75 வரை பயன் பெற்ற தொழில் துவக்குபவர்கள் 1262. அளிக்கப்பட்ட உதவியின் மதிப்புத் தொகை ரூ. 676.63 லட்சம். தொழில் துவக்கும் தனியாரது நிலத்தில், ரூ. 89 லட்சம் செலவில் 127 வாடகைக் கொள்முதல் தொழிற்கூடங்கள் கட்டப் பட்டுள்ளன.

'சிட்கோ'வின் சொந்த நிலத்தில், ரூ. 112.64 லட்சம் மதிப்புள்ள தொழிற் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன—அம்பத்தூரில் 89, திருச்சியில் 12, குருச்சியில் 26 மற்றும் ராணிப்பேட்டையில் 12. ரூ. 229 லட்சம் உத்தேசச் செலவில் 254 தொழிற் கூடங்கள் கட்டப்படவிருக்கின்றன.

1642 தொழில் துவக்குபவர்களுக்கு இதுவரை சிட்கோ வேலை வாய்ப்பளித்துள்ளது. அவர்கள் 15,000 நபர்களுக்கு மேலாகவே வேலைவாய்ப்பை அளித்துள்ளனர். சிறு தொழில்கள் தங்களது தயாரிப்புகளை வெளிநாடுகளில் விற்பனை செய்யவும் மற்றும் அவர்களது வளர்ச்சிப் பணிகளிலும் சிட்கோ உதவி அளிக்கிறது.

TAMIL NADU SIDCO

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்,**

நிர்வாகப் பகுதி, தொழிற்பேட்டை,


**கிண்டி, சென்னை - 600032.**

## தொழிற்கூடங்கள் அமைப்பதில் "சிட்கோவின் சாதனை"

| தொழிற்பேட்டையின் பெயர் | கட்டப்பட்ட தொழிற் கூடங்களின் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ லட்சம் | பயன்பெற்ற தொழில் அதிபர்கள் |
|---|---|---|---|
| அம்பத்தூர் | 130 | 100.00 | 130 |
| திருவரம்பூர் | 24 | 40.0 | 24 |
| குறிச்சி (கோவை) | 51 | 30.00 | 51 |
| இராணிப்பேட்டை | 31 | 25 00 | 31 |
| தொழிலதிபர்களின் நிலங்களில் அமைக்கப்பட்டது | 127 | 98.31 | 127 |
| | 363 | 293 | 363 |


## "சிட்கோ" வினல் திட்டமிடப்பட்டுள்ள தொழிற்பேட்டைகள்

| இடம் | தொழிற் கூடங்களின் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ. லட்சம் |
|---|---|---|
| திருப்பூர் (கோவை மாவட்டம்) | 100 | 75 |
| மாத்தூர் (புதுக்கோட்டை மாவட்டம்) | 7 | 10 |
| அம்பத்தூர் | 25 | 20 |
| கோயம்புத்தூர் | 12 | 10 |
| பூம்புகார் | 12 | 10 |
| கிருஷ்ணகிரி | 25 | 20 |
| | 181 | 145 |









டன்கள் விநியோகம் செய்துள்ளது.

ஈச்ச மர எண்ணெய்: 31-3-74 வரை ரூ. 45.74 இலட்சம் மதிப்புள்ள 847 மெட்ரிக் டன் ஈச்ச மர எண்ணெய் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. 1-4-74 முதல் 31-12-74 வரை 0.02 இலட்சம் மதிபபுள்ள 0.377 மெட்ரிக் டன்கள் விநியோகம் செய்துள்ளது.

காட்மியம் : ( Cadmium ) 31-12-74 முடிய 0.31 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 0.267 டன்களை விநியோகம் செய்துள்ளது.

நிலக்கரி : தமிழக அரசு சிட்கோவே நிலக்கரியை வாங்கி சிறு தொழில்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டது. அதன்படி 23.16 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 5442.915 மெட்ரிக் டன் நிலக்கரியை விநியோகம் செய்துள்ளது.

தேன் இரும்பு : ( Pig Iron ) 1974-ஆம் ஆண்டில் ஜுலை-ஆகஸ்ட் மாதங்களில் பெருமளவில் தேன் இரும்பு பற்றுக்குறை ஏற்பட்டது. ஆகையால் மெஸர்ன் சக்தி நிறுவனத்தாரிடமிருந்து 8.13 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 955 டன்களை விநியோகம் செய்தது. இதைத் தவிர இணை உற்பத்திக் குழுவிடமிருந்து (Joint Plant Committee ) பெற்ற 27.12 இலட்ச ரூபாய் மதிப்புள்ள 2906.535 டன்களை விநியோகம் செய்துள்ளது.

# தமிழகத்தில் பெருந்தொழில் வளர்ச்சி



## டிட்கோ

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான "டிட்கோ" எனப்படும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பொதுத்துறையிலும், கூட்டுத்துறையிலும், பெரிய, மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 1965 - ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 15 கோடியாகும்.

"டிட்கோ"வின் ஆதரவில் தொடங்கப்பெற்ற திட்டங்களில் இதுவரை மொத்தம் ரூ. 346 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பொதுத்துறையில் முதலீடு ரூ. 68 கோடியும், கூட்டுத்துறையில் முதலீடு ரூ. 278 கோடியும் ஆகும். இந்நிறுவனத்தால், இராமநாதபுரம் மாவட்டம், ஆலங்குளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள "தமிழ்நாடு சிமெண்ட்" தொழிற்சாலை முதன் முதலாக 1970-ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கியது. இத்தொழிற்சாலை ஆண்டுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்டதாகும்.

அடுத்து, வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உருக்காலை (Tamilnadu Steels) ஊது உலையையும், தொடர் வார்ப்பட வசதிகளையும் கொண்டது. ஆண்டுக்கு 1 இலட்சம் எஃகு உருக்குப் பாளங்கள் தயாரிக்க வல்ல இத்தொழிற்சாலை 1972-ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கியது.

ஆலங்குளத்திலுள்ள அரசு சிமெண்ட் தொழிற்சாலையில் தற்போது சிமெண்ட் உற்பத்தி செய்யும் ஈர (Wet) முறையை உலர் (Dry) முறைக்கு மாற்றவும், திருச்சி மாவட்டம், அரியலூரில் ஆண்டுக்கு 2·5 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் சிமெண்ட் ஆலையொன்றை நிறுவவும் திட்டமிடப்பட்டு வேலை துவங்கப்பட்டுள்ளது. ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் உற்பத்தி முறையை மாற்றி அமைப்பதன் காரணமாக மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 5 இலட்சம் டன்னாக உயரும். இப்புதிய உற்பத்தி முறை 1977-ஆம் ஆண்டு மத்தியில் செயல்படத் தொடங்கும். அரியலூரில் நிறுவப்பட இருக்கும் புதிய சிமெண்ட் ஆலை 1978-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.


இது தவிர மேலும் நான்கு புதிய திட்டங்களைப் பொதுத்துறையில் தொடங்குவதற்கு 'டிட்கோ' சிந்தித்து வருகிறது. ஆண்டுக்கு 31,000 ஸ்கூட்டர்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை லக்னோவிலுள்ள 'ஸ்கூட்டர்ஸ் இந்தியா லிமிடெட்' என்ற நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஆரம்பித்தல், செயற்கை இழை (Synthetics Fibres) தயாரிக்கும் நிறுவனம் அமைத்தல், தேனிரும்பு (Sponge Iron) உற்பத்தி செய்யும் நிறுவனம் அமைத்தல், மற்றும் அரக்கோணம் தமிழ்நாடு

எஃகுத் தொழிற்சாலையில் உருட்டுக் கம்பி ஆலே (Re-Rolling facilities) வசதியை ஏற்படுத்துதல் ஆகியவை ஆகும்.

தனியார் ஆர்வத்தையும், செயலாற்றும் திறனை-யும் நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகப் பயன் படுத்த வேண்டும் என்பதே கூட்டுத்துறையின் நோக்கமாகும். பொதுவாக இத்துறையில் 'டிட்கோ' 26 சதவிகிதம் பங்குத் தொகையை முத லீடு செய்யும், தனியார் துறையினர் 25 சதவிகிதம் முதலீடு செய்வர். இயக்குநர் குழுவில் 'டிட்கோ' மற்றும் தனியார் ஆகிய இருதுறையைச் சார்ந்த வர்களும் அங்கம் வகிப்பார்கள். நிறுவனத்தின் தலைவரை டிட்கோ நியமிக்கும், நிர்வாக இயக்கு நரைத் தனியார் துறையினர் நியமிப்பார்கள். இது-வரையில் கூட்டுத்துறையில் 19 கம்பெனிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில், 6 தொழிற்-சாலைகள் ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கி விட்டன. அவையாவன :-

| நிறுவனத்தின் பெயர் | | தயாரிப்பு |
|---|---|---|
| 1. | சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ். | யூரியா மற்றும் பிற உரங்கள். |
| 2. | தமிழ்நாடு குரோ மேட்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ். | பி.சி.டி. மற்றும் தோல் தொழிலுக்கு வேண்டிய பிற இரசாயனப் பொருட்கள். |
| 3 | பாண்டியன் கெமிக் கல்ஸ். | பொட்டாசியம் குளோ ரேட். |
| 4. | ஆசியா டுபாக்கோ நிறுவனம். | சிகரெட்டுகள். |
| 5. | டைனவிஷன் | டெலிவிஷன். |
| 6. | சதர்ன் போராக்ஸ் | போராக்ஸ் மற்றும் போரிக் அமிலம் |

இவை தவிர 1971-ஆம் ஆண்டு கூட்டுத்துறை யில் சேர்க்கப்படும் பொழுதே உற்பத்தியைத் தொடங்கிவிட்ட 'தமிழ்நாடு தாதா பார்மசூடிகல்ஸ்' (Tamil Nadu Dadha Pharmacuticals) (மருந்து வகைகளைத் தயாரிக்கும் நிறுவனம்) தற்போது உற் பத்தியை நான்கு மடங்காகப் பெருக்கியுள்ளது. அதன் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்தத் திட்ட மிடப்பட்டுள்ளது. நிக்கல் காட்மியம் செல்ஸ் தயாரிக்கும் தமிழ்நாடு ஆல்கலின்ஸ் பாட்டரீஸ் (Tamil Nadu Alkalines Batteries) என்ற நிறுவனமும், தொழில்களுக்கான உப்புத் தயாரிக்கும் நிறுவனமான மார்தி கிரிஸ்டால்ஸ் (Marthi Crystal Salt Co.) என்ற நிறுவன மும் ஏற்கனவே மாதிரி உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. அடுத்த சில மாதங்களில் அவை வர்த்தக முறையில் உற்பத்தி (Commercial prodn.) செய்யத் தொடங்கிவிடும். மேலும், மண்டபத்தில் அமைந்துள்ள கிரேட் சீ டிராலர்ஸ் பில்டிங் யார்டு மண்டபம் லிமிடெட் (Great Sea Trawlers Building Yard Mandapam Ltd.) (மீன் பிடி இயந்திரப் படகு கட்டும் நிலையம்) மீன்பிடி இயந்திரப் படகுகளைப் பழுதுபார்க்கும் பணியினை 1976-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தொடங்கு



மென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அரக் கோணம் காஸ்டிங்ஸ் அண்ட் போர்ஜிங்ஸ் நிறுவன மும் (Arkonam Castings & Forgings) தமிழ் நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் (Tamilnadu Chemical Products) நிறுவனமும் 1976-ஆம் ஆண்டு இறுதியில் வர்த்தக முறை உற்பத்தியைத் தொடங்கும்.

கூட்டுத்துறையில் நிறுவப்பட்டுள்ள கீழ்க்கண்ட தொழில் நிறுவனங்கள் அடுத்த இரண்டு ஆண்டுக் குள் உற்பத்தியைத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது. அவையாவன :-

| நிறுவனத்தின் பெயர் | | தயாரிப்பு |
|---|---|---|
| 1. | பைன் மெஷர் இன் ஸ்ட்ருமெண்ட்ஸ் லிட். | நுட்பமான அளவைக் கருவிகள். |
| 2. | ஆசியன் பேரிங்ஸ் லிமிடெட். | பேரிங்குகள். |
| 3. | தமிழ்நாடு இன்டர்-நேஷனல் எலக்ட்-ரானிக்ஸ் லிமிடெட் | மெட்டல்கேஸ்ட் சாலிட்டாண்டலம் கப்பாசிட்டர்ஸ். |
| 4 | இன்டர் காண்டினெ ண்டல் லெதர்ஸ் லிமிடெட் | பதனிடப்பட்ட தோல் கள். |
| 5 | ஸ்டைரோ பிலிம்ஸ் லிமிடெட் | பாலிஸ்டிரின் படச்சுருள் |
| 6 | தூத்துக்குடி ஆல்-கலின்ஸ் கெமிக்-கல்ஸ் லிமிடெட். | சோடா ஆஷ் மற்றும் அம்மோனியம் குளோ-ரைடு. |
| 7. | தமிழ்நாடு புளோ ரின் & அலேட் கெமிக்கல்ஸ் லிட். | அலுமினியம் புளோ-ரைடு. |

## மூலதனம்



இவை தவிர மேலும் 11 புதிய திட்டங்களுக் கான அனுமதிக் கடிதங்களை 'டிட்கோ' பெற் றுள்ளது.

'டிட்கோ', கூட்டுத்துறையிலும், பொதுத்துறை யிலும் நேரடியாகச் செய்துள்ள முதலீடுகள் இந்த ஆண்டு ரூ. 5 கோடி ஆகும். 1976 - 77 - ல் ரூ. 10 கோடியைத் தாண்டிவிடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. முந்திய ஆண்டுகளில் மூலதனத்திற் கான தொகையினைப் பெரும்பாலும் மாநில அரசிடமிருந்து உதவித் தொகையாகவும், கடனாக வும் 'டிட்கோ' பெற்று வந்தது. இது தவிர, 1976-77-ல் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதியையும், பொது மக்களிடமிருந்து டெபாசிட்டு களையும் பெற்றுக்கொள்ளும். அப்படிப் பெறும் டெபாசிட்டுகளுக்கு 3 ஆண்டும் அதற்கு மேலும் உள்ளவற்றிற்கு 12 சதவீத வட்டியும், 2 முதல் 3 ஆண்டு வரை உள்ளவற்றிற்கு 11½ சதவீத வட்டியும், 1 லிருந்து 2 ஆண்டு வரை உள்ள வற்றிற்கு 11 சதவீதம் வட்டியும் வழங்கப்படும்.

Grant.II TM




# ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ.500/-க்கு மேல் அதிகப்படி சம்பாதியுங்கள்...

# பூன்-ஓ-மில்க்® கிற்கு நாளொன்றுக்கு 20 பைசா செலவிடுங்கள்

**கொழுப்பு மிக்க மிகுதியான பாலுக்கும், கூடுதலான லாபத்திற்கும் பூன்-ஓ-மில்க்**

- **பூன்-ஓ-மில்க்கில்,** ஃபேட்டி மாறுபாட்டு விகிதத்தை அதிகமாக்கி, ஹார்மோனற்ற கெலெக்டோகோக்காகச் செயலாற்றி இதன் பயனாக பால் கறவையை 10% அதிகமாக்கும் அயோடினேடெட் கேஸீனின் அடங்கியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்,** விரைவில் ஆவியாகும் ஆஸிட்ஸ்களும்— அஸிடேட்டுகளும், பூட்ரிக் ஆஸிடும் அடங்கியுள்ளன; இவை வெண்ணெச்சத்தை 15% அதிகமாக்குகின்றன என்பது ரேடியோ ஐஸோடோபிக் சோதனைகள் மூலம் நிரூபணமாகியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்,** மாடுகளை ஆரோக்கியமாக வைத்திருந்து, பால் ஜுரத்தைக் கட்டுப்படுத்தும் கால்ஷியம், ஃபாஸ்ஃபரஸ் மற்றும் வைட்டமின் 'டி'யின் பூஸ்டர் டோஸும் அடங்கியுள்ளன.
- **பூன்-ஓ-மில்க்கில்,** சிறு அளவுகளில் தேவைப் படும், இன்றியமையாத தாதுப் பொருள்கள் எல்லாம் சிறந்த விகிதங்களில் அடங்கியுள்ளன. இவை மாடுகளின் சினைத் திறனை மேம்படுத்துகின்றன.

**பூன்-ஓ-மில்க் மூலம் உங்களுக்கு ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ. 500/-க்கு மேல் அதிகப்படி லாபம் கிடைக்கிறது.**

- தினமும் ஒருவேளை தீவனத்துடன் 15 கிராம் **பூன்-ஓ-மில்க்** கலந்து கொடுங்கள்
- ஒவ்வொரு மாட்டிற்கும் தினமும் 1 கிலோ கிராம் அதிகப்படி தீவனம் கொடுங்கள்



**பூன்-ஓ-மில்க் கெடுதலற்றது பயன்மிக்கது**

கறவையாடுகளுக்கு **பூன்-ஓ-மில்க்** ஒரு விதமான கெடுதலுமற்றது என்பதைப் பிரபலமான மிருக வைத்தியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

1 கிலோ மற்றும் 450 கிராம் பாக்கட்டுகளில் கிடைக்கிறது.

**பூன்-ஓ-மில்க் உங்கள் மாடுகளுக்கு ஒரு வரப் பிரசாதம் உங்கள் லாபத் திற்கு ஒரு ஊன்றுகோல்**

**பூன்-ஓ-மில்க்— கால் நடைத் தீவனத் துணை உணவு.**
ஆராய்ச்சியின் அடிப்படையில் தயாரிப்பவர்கள்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்., த.பெ. எண். 9417, பம்பாய் 400 093

**விநியோகஸ்தர்கள் :—** தண்ணீர்மலை ஏஜென்சி, 41-ஏ, கிரிரோடு, தி. நகர், சென்னை-600017.
இன்டோமேக் கார்ப்பரேஷன், 3, கொல்லன்பட்டறை தெரு, கீழவெளி வீதி, மதுரை-1.
ஸ்ரீ அன்னபூரணி எண்டர்பிரைசஸ், 651/1, ஜவகர் பஜார், கரூர், திருச்சி மாவட்டம்.
விவேகானந்தா எண்டர்பிரைசஸ், 101, மருத்துவமனை சாலை, சீர்காழி அஞ்சல், தஞ்சை மாவட்டம்.
நடராஜ் ஏஜென்ஸீஸ், கோபிசெட்டிபாளையம், கோவை மாவட்டம்.

**விற்பனையாளர்கள் இல்லாத பகுதிகளில் ஸ்டாக்கிஸ்ட்டுகள் தேவை.**

# அரிசன மக்களுக்கு ஆயிரம் நன்மைகள்!

'பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'.

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்குப்படி பிறப்பால் எவரும் சரிநிகராக இருந்தும், இடையில் எப்படியோ, எப்போதோ, மக்களில் உயர்வு தாழ்வு என்ற பாகுபாடு நுழைக்கப்பட்டு, தீண்டாமை எனும் கொடிய பழக்கம் நமது நாட்டில் நெடுங்காலம் நிலவி வந்ததால் அம் மக்களுக்கு மட்டுமின்றி, நாட்டிற்கும் ஏற்பட்ட இன்னல் பலப் பல!

இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் மக்கட் தொகையில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதி மக்களைக்கொண்ட ஒரு மாபெரும் சமுதாயத்தையே 'தீண்டத்தகாதவர்' என்று ஒதுக்கி, ஒடுக்கி, நசுக்கி அவர்களைக் கல்லாமையிலும் வறுமையிலும் அறியாமையிலும் ஆழ்த்தி சொல்லொணுக் கொடுமைகளுக்கு உள்ளாக்கினர். நமது நாடு சுதந்திரம் அடைந்ததும் அரசியல் சட்டத்தின் மூலம் இக்கொடிய தீமையை அறவே ஒழிக்க வழி வகுக்கப்பட்டது.

சட்டத்தின் துணைக்கொண்டு தீண்டாமையின் பிடியிலிருந்து விடுபட்டு சமுதாய உரிமையை அடைவதால் மட்டும் பல நூற்றுண்டுகளாக வாடிய, வதங்கிய, தாழ்த்தப்பட்ட இம்மக்கள் மேம்பாடடைய இயலாது என்பதை அரசு உணர்ந்து அவர்களது முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி பல்வகைத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றது.

தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களின் நிலை உயர்வதற்கும், அவர்களின் வாழ்க்கையில் விரைவில் மறுமலர்ச்சி ஏற்படவும் முனைப்பான செயலாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாகக் கல்வி, பொருளாதாரம், மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஆகிய இவ்வினங்களில் பல புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் பல புதிய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**1971**-ஆம் ஆண்டு எடுத்த மக்கள் தொகைக் கணிப்புப்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை **412** இலட்சம். இதில் அரிசன மக்கள் **73** இலட்சம். மலைவாசி மக்கள் **3.12** இலட்சம். அரிசன மற்றும் மலைவாசி மக்கள் கல்வி, சமூக, பொருளாதாரத் துறையில் மற்ற சமுதாயத்தினரைவிட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால், அவர்களின் நிலையினை மேம்பாடடையச் செய்யத் தமிழ்நாடு அரசு தேவையான நிதி ஒதுக்கீட்டினைச் செய்து பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியும், சலுகைகளை வழங்கியும் வருகிறது.

தற்போது, மாநில அரசால் இந்து அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் சலுகைகள் (வேலை வாய்ப்பு ஒதுக்கீடு தவிர) அனைத்தும் கிருத்தவ அரிசனங்களுக்கும் வழங்கப்படுகிறது. குறிப்பாக, சிறுதொழில் அமைக்க வட்டியில்லாக் கடன் வழங்குதல், உழவு மாடுகள் வாங்க, விவசாயக் கிணறுகள் வெட்ட மானியம் வழங்குதல், கைத்தொழில் கருவிகள் இலவசமாக அளித்தல், தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இலவச வீடுகள் வழங்குதல் போன்ற சலுகைகளுக்குக் கிருத்தவ அரிசனங்கள் தகுதியுடையவர்களாவார்கள்.

**ஏற்றமிகு திட்டங்கள்**

1. கல்வி

2. பொருளாதாரம்

3. வீட்டுமனை, வீட்டுவசதி, நல்வாழ்வு மற்றும் இதரத் திட்டங்கள்.

**கல்வி**

'எண்ணென்ப ஏனை
எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

என்பது வானுயர் வள்ளுவன் வாக்கு.

''அன்ன சத்திரம் ஆயிரம்
நாட்டல்

# ஐஓபியின் கடன் உதவியால் மீண்டும் விவசாயத்தில் ஈடுபட முடிந்தது



"இரண்டாண்டு வறட்சியினால் கைப்பணமும் செலவாகி உழவு மாடுகளைக்கூட விற்றாகிவிட்டது. நல்ல மழை பெய்த பிறகும் கூட விவசாயம் செய்ய முடியவில்லை."

"ஐஓபி விவசாயிகளுக்கு உதவுகிறது என அறிந்து அதன் கிளை மானேஜரை சந்தித்தேன். இன்முகத்துடன் வரவேற்ற அவர் என் நிலத்தைப் பார்வையிட்டார். அவர் ஆலோசனைப்படியும் பாங்கிலிருந்து கிடைத்த கடனுதவியாலும் பம்ப் செட் அமைத்து மேடு பள்ளமான நிலத்தைச் சமப்படுத்தி ஐ.ஆர். 20 நெல் பயிரிட்டேன். அமோகமாக விளைந்து என் வருமானம் பெருகியது. தவணைப்படி கடனையும் அடைத்து ஐஓபியில் ஒரு சேமிப்பு கணக்கும் ஆரம்பித்துவிட்டேன்."

"மறு சாகுபடிச் செலவுக்கும், துணைத் தொழிலாக இரு உயர் ஜாதி பால் மாடு வாங்கவும் கடனுதவி செய்துதர ஐஓபி கிளை மானேஜர் இசைந்துள்ளார்"

"மேலும் ஐஓபியின் கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ் எங்கள் கிராமத்தை எடுத்துக் கொண்டுள்ளார்கள் அதனால் கிராம விவசாயிகள் அனைவரும் பயன் பெறும் வகையில் புதிய கிணறுகள் வெட்டவும், இருப்பவற்றை ஆழப்படுத்தவும், பம்ப் செட், டிராக்டர், பவர் டில்லர், ஸ்பிரேயராகியவை வாங்கவும் ஆடு, கோழி, பால் பண்ணைகள் வைக்கவும், உரம், பூச்சி மருந்து, விதை விற்பனைக்கு உதவவும், விஞ்ஞான ரீதியில் பயிர்ச் சாகுபடிக்கும் நல்ல ஆலோசனைகள் கூறுவதோடு கடனுதவிக்கும் ஏற்பாடு செய்து தருகிறார்கள்"

இதே போன்று நீங்களும் ஐஓபியிடம் உதவி பெறலாம். "ஐஓபியின் கடனுதவி உழவர்க்குப் பல வசதி" பற்றி அறிந்து கொள்ள கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள் அல்லது அருகில் உள்ள ஐஓபி கிளை மானேஜரிடம் விவரம் கேளுங்கள்.

**இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்**

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

'ஐஓபியின் கடனுதவி உழவர்க்கு பல வசதி' பற்றிய சிற்றிதழ் அனுப்புக

பெயர்: ______

முகவரி: ______

இந்தக் கூப்பனை பூர்த்தி செய்து இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க், 151, மவுண்ட் ரோடு, சென்னை-600 002 என்னும் முகவரிக்கு அனுப்பவும். அல்லது அருகில் உள்ள ஐஓபி கிளை மானேஜரை அணுகவும்.

ஆர்

IOB-1011a

அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்'

எனப் போந்தான் பைந்தமிழ் கவிஞன் பாரதி.

இவை கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. மேலும், கல்வியில் ஏற்றம் கண்டால், சமுதாயத்தில் சம உரிமையையும், பொருளாதார முன்னேற்றத்தையும் மற்ற வசதிகளையும் விரைவில் பெற இயலும் என்பதாலும், கல்விக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது. ஆகவே ஒவ்வொரு ஆண்டும் அரிசன நலத்துறைக்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பங்கு கல்விக்காகச் செலவிடப்படுவது உள்ளங்கை நெல்லிக்கனி!

> கிராமங்களுக்குத் தொண்டு செய்வது சுயராஜ்பத்தை நிலை நிறுத்துவதாகும்.
>
> வயது வந்த மாணவர்கள், அதாவது கல்லூரி மாணவர்கள் அனைவரும் படித்துக் கொண்டிருக்கும் போதே கிராமத் தொண்டினைத் தொடங்கவேண்டும்.
>
> தொண்டு செய்ய விரும்புகிறவன் கிராமங்களை நாடிச் சென்று, அங்கே தோட்டியாகவும், நூல் நூற்பவனாகவும், காவற்காரனாகவும், ஆசிரியராகவும், ஏககாலத்தில் தன்னை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.
>
> — காந்தியடிகள்

### படிப்பு உதவித் தொகை

அரிசன-பழங்குடி இனத்தைச் சார்ந்த மாணவ மாணவியர்களுக்கு தொடக்க வகுப்பிலிருந்து பட்ட மேற்படிப்பு வரையிலுமான பல்வகைப் படிப்புகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகின்றது. 1966-67-ஆம் ஆண்டு இதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ. 88.20 இலட்சங்களாகவும், பயனடைந்தோர் எண்ணிக்கை 2,42,845 ஆகவும் இருந்தது விரிவடைந்து 1974-75 இல் அவை முறையே ரூ. 228.36 இலட்சங்களாகவும், 4,89,009 ஆகவும் உயர்ந்துள்ளன. நடப்பு நிதியாண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 246.71 இலட்சங்களாகும்.

மேலும் பல புதிய சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் சில.

### காந்தி நினைவு படிப்புதவித் தொகை

தேசத்தந்தை மகாத்மா காந்தி அடிகளின் நினைவைப் போற்றும் முகத்தான், ஒவ்வொரு மாவட்டத்திலும் புகுமுக வகுப்பில் முதலாவதாகத் தேர்வு பெறும் ஒரு அரிசன மாணவருக்கும் ஒரு அரிசன மாணவிக்கும் சிறப்புத் தொகையாக ஒவ்வொருவருக்கும் முதலாண்டு ரூ. 1,500, இரண்டாம் ஆண்டு ரூ. 1000 என்ற அடிப்படையில் தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகின்றது. இத்துடன் அவர்கள் தங்களுக்குரிய மற்ற சாதாரண உதவித் தொகைகளையும் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு வருமான வரம்பும் கிடையாது.

உயர்நிலைப்பள்ளிப் பொது இறுதித்தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் இரண்டு இடங்களைப் பெறும் மாணவர்களுக்குச் சிறப்பு உதவித்தொகை வழங்கப்படுகின்றது.

### உயர் படிப்பிற்குக் கடன் உதவித் தொகை

புகுமுக வகுப்பிற்கு மேலான பட்ட வகுப்புகளிலும், மருத்துவம், பொறி இயல் போன்ற தொழில் படிப்பு பயில்பவர்களுக்காக இத்திட்டம் 1971-72-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து படிப்படியாக உயர்ந்து இது தற்போது ரூ. 9.26 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர் பயன் பெறுகின்றார்கள். இது வட்டியில்லாக் கடன். படித்த பிறகு வேலை கிடைத்த ஓராண்டில் சுலபத் தவணையில் திருப்பிக்கட்ட வேண்டும்.

தகுதி அட்டைகள் (Entitlement Cards) வழங்குவதன் மூலம் கல்லூரிகளில் புதிதாகச் சேரும்போது, கல்விக்கட்டணம், உண்டுறை முன்பணம் முதலியன செலுத்தாமல் சேர வசதி செய்யப்பட்டுள்ளது. தேவைப்படுபவர்களுக்கு சென்னை நகரில் ரூ. 200-ம், வெளியூர்களில் ரூ. 150-ம் முன்பணமாக (Adhoc Grant)வும் வழங்கப்படுகின்றது.

### இட ஒதுக்கீடு :

கல்லூரிகள், தொழிற்கல்வி நிலையங்கள் முதலியவற்றில் 18 விழுக்காடு இடங்கள் அரிசன மற்றும் மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த ஒதுக்கீடு எல்லா வகையான படிப்புகளிலும் உள்ள ஒவ்வொரு பிரிவிற்கும் பொருந்தும். பௌதீகம், இரசாயனம், தாவர இயல், உயிரியல், கணிதம் முதலிய அறிவியல் படிப்புப் பயிலும் திறமையான மாணவ மாணவியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இதேபோல் மற்ற கலைப்படிப்பு (Arts Courses) பயில்பவர்களுக்கும் தற்போது சென்னையில் மட்டும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. கோவை, மதுரை, திருச்சி நகர்களுக்கும் இத்திட்டம் விரைவில் நீட்டிக்கப்படும்.

கல்வித்துறை, தனியார் கல்வி நிறுவனங்கள் தவிர, அரிசன நலத் துறையினால் நடத்தப்படும் பள்ளிகளின் விவரம் பின்வருமாறு:


அரிசன நலப் பள்ளிகளிலும் மலைவாசி மக்களுக்கான உறைவிடப் பள்ளிகளிலும் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு இலவசமாகப் புத்தகங்களும் கரும்பலகைகளும் மற்றும் சீருடைகளும் வழங்கப்படுகின்றன. மேலும், அரிசன நலப்பள்ளிகளில் மாணவ மாணவிகளுக்கும் மலைவாசிகளுக்கான உறைவிடப் பள்ளிகளிலும் உண்டி உறையுள் வசதி அளிக்கப்படாதவர்களுக்கும் இலவசமாக மதிய உணவு வழங்கப்படுகிறது. பள்ளிகளுக்குத் தவறாது ஒழுங்காக வருவதையும், தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதை

வளம் தரு வீதியிலே...

# ஏற்றுமதித் துறையில் ஏற்றமிகு சாதனை.

இந்தியாவின் ஏற்றுமதி ரூ. 3,300 கோடியை எட்டியுள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன் இந்த அளவு ரூ. 805 கோடிதான்.

இந்தியப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் புதுக் கவர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதற்கு தா நிர்ணயம் பெருமளவில் உதவியுள்ளது. எஞ்ஜினியரிங் சாதனங்களின் ஏற்றமிகு ஏற்றுமதிச் சாதனையால் கடந்த வருடம் ரூ. 353 கோடி அந்நியச் செலாவணி கிடைத்தது.



நெஞ்சில் உரமும்
செயலில்
திறனும் உறுதுணை
நிற்கும்

davp 75/499

| விவரம் | அரிசன நலப் பள்ளிகள் | மலைவாசி மக்களுக்காக உறைவிடப் பள்ளிகள் |
|---|---|---|
| தொடக்கப்பள்ளிகள் | 742 | 66 |
| நடுநிலைப்பள்ளிகள் | 81 | 7 |
| உயர்நிலைப்பள்ளிகள் | 19 | 3 |
| இரவுப்பள்ளிகள் | 17 | — |
| திண்ணைப்பள்ளி | 1 | — |
| மொத்தம் | 860 | 76 |
| 1975-76-ஆம் ஆண்டு புதியதாகத் திறக்கப்பட்ட ஓராசிரியர் பள்ளிகள் | 100 | — |
| மொத்த பள்ளிகள் | 960 | 76 |
| மேற்கூறிய பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | 1,35,674 | 5,659 |

ஒரு பள்ளி மட்டும் உறைவிடமில்லாத பள்ளி

யும், வெற்றி பெறுவதையும் ஊக்குவிக்கும் வகையில் பல்வகை பரிசுத்திட்டங்களும் சுற்றுலாத் திட்டமும் புதியதாகச் செயல் படுத்தப்படுகின்றன.

**விடுதிகள்**

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு உண்டி உறையுள் வசதிகள் அளிப்பதற்காக அரிசன நலத் துறையினால் விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் விவரங்கள் பின்வருமாறு:

| விவரம் | அரிசனங்களுக்காக | மலைவாசிகளுக்காக |
|---|---|---|
| உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கானவை | 374 | 10 |
| உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கானவை | 156 | 5 |
| கல்லூரி மாணவர்களுக்கானவை | 30 | — |
| கல்லூரி மாணவிகளுக்கானவை | 6 | — |
| தொழிற்கல்வி பயில்வோர்களுக்கானவை | 7 | — |
| | 573 | 15 |
| பயன் பெறும் மாணவர்கள் | 26,694 | 480 |
| பயன் பெறும் மாணவிகள் | 9,377 | 180 |
| மொத்தம் | 36,071 | 660 |

அரிசன நலத்துறையிலிருந்து மானியம் பெற்று நடத்தப்படும் தனியார் விடுதிகள் அரிசனங்களுக்காக 49-ம், மலைச்சாதியினருக்காகப் பள்ளியுடன் கூடியவை உள்பட 5-ம் உள்ளன. பயன் பெறும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை முறையே 3,299-ம், 418-ம் ஆகும்.

தீண்டாமை நீங்கி ஒரு ஒருங்கிணைப்பு ஏற்படுவதற்காக இவ் விடுதிகளில் பிற்பட்ட இனத்தவரும், முற்பட்ட இனத்தவரும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டில் அனுமதிக்கப்படுகின்றனர். விடுதிகளில் உள்ள மாணவ, மாணவியரின் கல்வித் தரத்தை உயர்த்தப் பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

**பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்**

சிறுதொழில் துவங்க வட்டியில்லாக்கடன்: சிறுதொழில் அமைக்க வட்டியில்லாக்கடன் 1968-69-அம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டுவருகின்றது. சென்ற ஆண்டு முடிவு வரை 8,689 நபர்களுக்கு ரூ. 54.20 இலட்சம் கடன் வழங்கப்பட்டது. ஆண்டொன்றிற்கு ரூ. 10 இலட்சம் வழங்கப்படுகின்றது. காய்கறிக் கடை, தேநீர் விடுதி, விறகுக்கடை, மளிகைக்கடை, மருந்தகம், அச்சகம், ஈருளிக் கடை போன்ற தொழில்களுக்குத் தகுதியைப் பொறுத்து ரூ. 250 முதல் ரூ. 15,000 வரை கடன் தரப்படுகின்றது. இது 100 மாதத்தவணைகளில் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

கருமார், தச்சு, தையல், தோல்பதனிடுதல், சலவைத் தொழில் இன்ன பிற தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு அவரவர் தொழிலுக்குத் தேவைப்படும் கருவிகளும், சாதனங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் ரூபாய் இதற்காகச் செலவிடப்படுகின்றது.

கிராமக் கைத்தொழில் வாரியம், தொழில் வணிகத்துறை, இவை மூலம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இயங்கி வருகின்றன.

பாசனக்கிணறுகள் அமைக்க ஒவ்வொரு கிணறுக்கும் ரூ. 2,500-ம் உழவு மாடு, விதைகள், உழவுச் சாதனங்கள் ஆகிய இவற்றை வாங்க ரூ. 600 மானியமாக வழங்கப்படுகின்றது. 55 கூட்டுறவு நிலக் குடியேற்றப் பண்ணைகளும் நடத்தப்படுகின்றன.

369 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கறவை மாடுகள் வாங்க ரூ. 1,500 அரசால் வழங்கப்படுகின்றது. இதில் 250, மானியமாகவும், மீதமுள்ளது கடனாகவும் தரப்படுகின்றது.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்க வகை செய்யப்படுகின்றது.

இந்திய எரிபொருள் எண்ணெய்க் கழகத்தாரிடம் மண்ணெண்ணெய் எரிபொருள் (Gas) பெற்று வாணிபம் செய்வதற்குரிய நிதி உதவியை அரசும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் வழங்குகின்றன.

**வேலைவாய்ப்பு**

இந்திய நிருவாகப்பணி (I.A.S.) இந்திய வெளிநாட்டுப்பணி

# தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட்,

நெ. எக்ஸ். 406.

**14, சித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை 600 007**


தொலைபேசி : 30877, 30878 — தந்தி : ''ஹவுஸ்பாங்க்''

செயலாளர் : 33000 — தபால் பெட்டி : 486


தலைவர் : **திரு. பழனிவேல்ராஜன்,** பி.எஸ்.ஸி., பி.எல்.,

உப-தலைவர் : **திரு. பி. கஸ்தூரி பிள்ளை**

பொருளாளர் : **திரு. எஸ். பழனிசாமி,** எம். ஏ.,

---

| | | | |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | .. | ரூ. | 5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | .. | ரூ. | 3,09,02,125/- |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | .. | ரூ. | 25,66,31,157/- |

---

*இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்குப் புதிய வீடு கட்ட 15 வருட நீண்ட காலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.*

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்சக் கடன் அளவு

| | | | |
|---|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | .. | ரூ. | 30,000/- |
| புதிய வீடுகள் கட்டுவதற்கு (கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம்) | .. | ரூ. | 10,000/- |

**பூ. க. பத்மநாபன்,** பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.

---

# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

தபால் பை எண். 171 — தொலைபேசி எண் : 2402

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். — நடைமுறை மூலதனம் 1711 லட்சம்

### வட்டிவிகித அட்டவணை

**கால் டெபாசிட்டுகள் :** ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) — $3\frac{1}{4}$ %

ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) — $3\frac{1}{2}$ %

**சீசன் டெபாசிட்டுகள் :** ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும்

15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் — 3 %

46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் — $3\frac{1}{2}$ %

**பிக்செட் டெபாசிட்டுகள் :** ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6 %
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் $6\frac{1}{2}$ %
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் $7\frac{1}{2}$ %
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் $8\frac{1}{2}$ %
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் $9\frac{1}{2}$ %
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் $10\frac{1}{2}$ %

**நடப்புக் கணக்கு $\frac{1}{2}$%** — **சேமிப்புக் கணக்கு 6 %**

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

**தி. பாலசுந்தரம்,** பி.ஏ., — துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி.

**பி. காசி,** பி.எஸ்.சி., எச்.டி.வி., — காரியதரிசி.

**எஸ். ஆறுமுகம்,** — தலைவர்.

## அறிவிப்பு

16-2-76 முதல் 'தமிழரசு' இதழ் தொடர்ந்து புதிய பொலிவுடன் வெளிவருகிறது. சென்ற இதழ் (1-2-76) வெளியிடப்பட முடியாமைக்கு வருந்துகிறோம். அனைவரும் வழக்கம்போல் தொடர்ந்து ஒத்துழைப்புத் தரும்படியும், ''தமிழரசு'' இதழினைப் படித்துப் பயனுறும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாதாரர்களுக்கு 1–2–76 தேதிய இதழுக்குப் பதிலாக, சந்தா முடியும்போது மேலும் ஒரு இதழ் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிருவாகி

தமிழரசு

(I.F.S.) இந்தியக் காவல்துறைப் பணி (I.P.S.) போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக மத்திய அரசுப்பணியாளர்கள் தேர்வுக் கழகம் நடத்தும் தேர்வுகளில் எழுதித் தேர்வடைவதற்காகப் பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்று சென்னையில் மத்திய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 60 நபர்கள் தங்கிப் பயிற்சி பெறலாம். பயிற்சி பெறுபவர்களுக்கு இலவச உண்டுறை வசதியுடன் சிறப்புப் பயிற்சி தரப்படுகின்றது.

இராணுவத்தில் அலுவலர்களாக (Commissioned Officers) சேர விரும்புவர்களுக்கும் பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்றும் பிற்பட்டோர்-தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்காக நடத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு அலுவலர் தேர்வுக் கழகம் நான்காவது பிரிவு அலுவலர்களை (இளநிலை உதவியாளர்-தட்டச்சர்) தேர்ந்தெடுக்க நடத்தும் தேர்வுகளில் வெற்றி வாய்ப்புகளை அதிகப்படுத்த அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படுகின்றன. இந்நிலையங்களில் தேர்விற்கு முன்பாக 5 திங்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சிக் காலத்தில் திங்கள் ஒன்றிற்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 45/- நிதி உதவி வழங்கப்படுகின்றது.

இதுபோல உயர்தர அலுவலர் தேர்விற்கும் பயிற்சி அளிக்க நிலையம் திறப்பது அரசின் கவனத்தில் உள்ளது.

தட்டச்சு, சுருக்கெழுத்து முதலிய பயிற்சி பெறுவதற்காக நிதியுதவி வழங்கப்படுகின்றது. முதல் முறையிலேயே தேர்வு பெறுபவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

பட்டயக் கணக்காயர் பதவிகளில் அரிசன வகுப்பைச் சார்ந்த எவரும் இல்லை என்பதால் ஆண்டுதோறும் சிலரைப் பொறுக்கி எடுத்து இப்பணிக்கான பயிற்சி அளிக்கவும் அதற்காக நிதியுதவி வழங்கவும் அரசு வகை செய்துள்ளது. வணிக வரித்துறைகளிலும் உயர்நீதி மன்றத்திலும் பணிபுரியும் அரிசன மலைவாசிப் பணியாளர் தங்கள் துறையினர் நடத்தும் அலுவலகத் தேர்வுகள் எழுதி வெற்றி பெறத் தனிப் பயிற்சி அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அரசுப் பணிகளுக்கு அரிசன மலைவாழ் மக்களுக்கென நிர்ணயிக்கப்பட்டிருந்த 16 விழுக்காடு இட ஒதுக்கீட்டை 18 விழுக்காடாக அரசு உயர்த்தியுள்ளது. பொதுத்துறை (அரசு) நிறுவனங்களுக்கும் இவ்விதி பொருந்தும். இந்த இட ஒதுக்கீடு முறை பதவி உயர்வுகளுக்கும் பொருந்துமாறு நீடிப்பது அரசின் கவனத்தில் உள்ளது.

இட ஒதுக்கீடுமுறை தற்காலிக நியமனங்களுக்கும் கடைப்பிடிக்கப்படவேண்டும் என அரசு ஆணை இட்டுள்ளது. இட ஒதுக்கீடு முறை எல்லாத் துறைகளிலும் (ஊராட்சி ஒன்றியங்கள் உட்பட) சரிவர கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதா என்று கண்காணிக்க உயர்நிலைக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. தமிழக முதலமைச்சர் இதன் தலைவராகவும், அரிசன நல அமைச்சர் துணைத் தலைவராகவும் உள்ளனர்.

### வீட்டுமனை, வீட்டுவசதி மற்றும் இதரத் திட்டங்கள்

அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களிலிருந்தும், அவை இல்லாத இடங்களில் தனியாக நிலங்களை விலை கொடுத்துக் கையகப்படுத்தியும், மூன்று செண்டு பரப்பளவிற்குக் குறையாமல் வீட்டுமனைகள் முதற்கட்டமாக வழங்கப்படுகின்றன. 2,35,949 மனைகள் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தியதன் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக இதுவரை ரூ. 4.42 கோடி செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் மட்டும் நிலம் கையகப்படுத்த ரூ. 48 இலட்சம் செலவழிக்கப்பட்டது. இதல்லாமல் குடியிருப்புச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட 1,66,158 மனைகளில் அரிசனங்களுக்கு மட்டும் 1,03,470 மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மனைகள் வழங்கப்பட்ட பின்னர் தாங்களாகவே வீடுகள் கட்டிக்கொள்ள வசதி அற்றவர்களுக்கு மானியமாகவும் கடனாகவும் நிதி உதவி வழங்கி அரிசனங்களுக்கு 21,655 வீடுகளும், மலைவாழ் மக்களுக்கு 4,720 வீடுகளும் அரிசன நலத்துறையால் கட்டித் தரப்பட்டன. கடனாக வழங்கப்பட்டு திரும்பச் செலுத்தப்படாமல் இருந்த ரூ. 35 இலட்சங்களுக்கு மேற்பட்ட தொகையை அரசு தற்போது தள்ளுபடி செய்து விட்டது.

வீட்டுவசதி அனைவருக்கும் விரைந்து செய்து தரப்பட வேண்டுமென்று அரசு விரும்பி

யது. இதற்கென 'அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தை' அரசு துவக்கி அதன் மூலம் நல்ல தரமான வீடுகளைக் கட்டி அரிசனங்களுக்கு இலவசமாக வழங்குகின்றது. ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 4,000 ஆகும். மலைப்பகுதியில் அமைக்கப்படும் வீட்டின் மதிப்பு ரூ. 6,000 ஆகும். இக்கழகத்திற்கு நடப்பு நிதியாண்டில் ரூ. 8.27 கோடி நிதியுதவியை அரசு வழங்கும். ஏழை அரிசனங்களுக்கு இலவசமாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம் செயற்பட்டு வருகிறது.

துப்புரவுத் தொழில் செய்பவர்களுக்கென வீடுகட்டும் திட்டம் ஒன்று செயல்பட்டு வந்தது. இத்திட்டமும் இனி அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு. சுதந்திர வெள்ளி விழாவினை ஒட்டி 100 கிராமங்களில் ரூ. 46 இலட்சம் செலவில் இவர்களுக்கென 2,300 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்கு மத்திய அரசு நிதி உதவி வழங்கியது. துப்புரவுப் பணியாளர்களுக்குத் தள்ளுவண்டிகளும், கரண்டிகளும் சுரண்டிகளும், கையுறைகளும், காலுறைகளும் வழங்கப்படுகின்றன. இவர்களது பணியில் உள்ள அவல நிலையைப் போக்கும் வகையில் எல்லா இடங்களிலும் நச்சுத் தொட்டிகளுடன் கூடிய கழிப்பிடங்கள் அமைக்கும் திட்டம் சென்ற ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகின்றது.

## குடிநீர் வசதி

25,000 குடியிருப்புகளில் இதுவரை 23,311 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மீதியுள்ள 1,689 குடியிருப்புகளுக்கும் விரைவில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்கின்றது. 1971-ப் ஆண்டில் உள்ளூர் முன்னேற்றப்பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட ஒரு கோடி ரூபாயில் 25இலட்சங்கள் அரிசனக் குடியிருப்புப் பகுதிகளுக்கென ஒதுக்கி செலவிடப்பட்டது. மேல்நிலை நீர்த்தொட்டிகளும், நிலநிலை நீர்த்தொட்டிகளும், குடிநீர்க்குழாய்களும் தேவையை ஒட்டி அமைக்கப்பட்டு வருகின்றன. குடிநீர் வசதிக்காக மட்டும் ஆண்டுதோறும் ரூ. 17 இலட்சங்கள் செலவிடப்படுகின்றன.

இணைப்புப் பாதைகள், இடுகாட்டிற்கு வழி முதலியவற்றிற்காக அரிசன நலத்துறை செலவிடும் தொகை அன்னியில்நெடுஞ்சாலை கிராமப்புறப்பணித்துறை மூலம் ரூ. 30 இலட்சம் இவ்வாண்டு செலவிடப்படுகின்றது.

## மின் இணைப்பு

எல்லாக் குடியிருப்புகளுக்கும் மின்வசதி விரைந்து செய்து தரப்பட வேண்டி அரசு தீவிர நடவடிக்கை எடுத்து இதுவரை 23,562 குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 1,438 குடியிருப்புகளுக்கும் நடப்பு ஆண்டிலேயே இவ்வசதி அளிக்க தீவிர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மின் விளக்கு எரிகட்டணச் செலவைக்கூட அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. மின் இணைப்பிற்காக ரூ. 55 இலட்சமும், மின் விளக்கு எரிகட்டணத்திற்காக ரூ. 27 இலட்சமும் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமையைத் தடுக்கவும், அறவே அதனை ஒழிக்கவும் சட்டரீதியாக முனைப்புடன் செயல்படுவதுடன் மக்களிடையே மன மாற்றத்தை ஏற்படுத்தவும் அரசு அக்கறையுடனும், ஆர்வத்துடனும் பாடுபட்டு வருகின்றது.

தீண்டாமைக் குற்றம் செய்பவர்களுக்குக் கடும் தண்டனை அளிப்பதற்கு தீண்டாமைச் சட்ட விதிகளைத் திருத்தி அமைக்க இந்திய அரசுக்குத் தமிழக அரசு பரிந்துரை செய்துள்ளது. தீண்டாமைக்குற்றங்களைப் புலனாய்வுச் செய்து நடவடிக்கை எடுக்க 'தீண்டாமைத் தடுப்பு-பறக்கும் காவல் படை' களை இவ்வரசு அமைத்துள்ளது. இதுவரை 6,987 வழக்குகள் காவல்துறையால் தொடரப்பட்டு அவற்றில் 4,692 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதன்னியில் வட்ட மாவட்ட அரிசன நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சனவரித் திங்களில் கடைசி வாரம் 'அரிசன வாரமாகவும்' அம்மாதம் 30-ஆம் தேதி அரிசன தினமாகவும் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இந்திய அரசியல் சிற்பி மாமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பிறந்த ஏப்ரல் 14-ஆம் நாளை தீண்டாமை ஒழிப்பு நாளாக அனுசரிக்கப்படுகின்றது. நடப்பு ஆண்டு ஏழாம் வகுப்புப் பாடநூலில் டாக்டர் அம்பேக்காரின் வாழ்க்கை வரலாறு சேர்க்கப்பட்டுள்ளது.

தீண்டாமை நீங்கி,சாதியில்லாச் சமுதாயம் ஏற்பட வகை செய்கிறது கலப்புத் திருமணம். ஆகவே இதற்கு ஆக்கமும், ஊக்கமும் தர $1\frac{1}{2}$ சவரனில் பொற்பதக்கமும், சிறப்புச் சான்றிதமும் வழங்கி கலப்பு மணம் புரிபவர்களைப் பாராட்டும் திட்ட ஒன்றினை 1968-69 இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ்நாடு அரசு துவக்கிற்று. இவர்களுக்குப் பாத்திரங்கள் வாங்க ரூ. 200 ரொக்கப் பரிசும் வழங்கப்படுகின்றது. இதுவரை 317 கலப்புத் திருமணத் தம்பதிகள் தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

## பழங்குடி (மலைவாழ்) மக்களுக்கென சிறப்புத் திட்டம்

முந்திய பகுதிகளில் சொல்லப்பட்டவைகள் அல்லாமல் இவர்களின் மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்தி ஒருங்கிணைந்த முன்னேற்றம் காண்பதற்காக சேலம் மாவட்டத்தில் ஏர்க்காட்டிலும், கொல்லி மலையிலும் இரண்டு வளர்ச்சி வட்டாரங்கள் செயல்பட்டு வருகின்றன. கல்ராயன், ஜவ்வாது மலைப்பகுதிகளுக்கும் பயன்படும் வகையில் துணைத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது.

இவர்கள் தோட்ட வேலைக் கலையை அறிவுபூர்வமாக உணர்ந்து பயன்பெறத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மலைப் பகுதிகளில் எவ்வெவ் வகைப் பயிர்களை எங்கெங்கு, எப்படி, எப்போது, எவ்விதம் விஞ்ஞான முறைப்படி பயிரிட்டு பயன் பெறலாம் என்று இவர்களுக்குத் தோட்டக்கலை வல்லுநரால் ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் இஞ்சி, மஞ்சள், ஏலம், காபி, பழவகைகள், வாசனைப் பொருட்கள், உருளைக் கிழங்கு முதலியன பயிரிட கன்றுகள், விதைகள் போன்றவைகள் இவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கின்றன. இவர்களின் முன்னேற்றத் திட்டங்கள் பற்றியும், கடன் நிவாரணச் சட்டங்கள் இயற்றுவது பற்றியும் ஆராய்ந்து ஆலோசனை வழங்க வருவாய் வாரிய உறுப்பினர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்றத் தாழ்வு அகற்றி, சாதியில்லாச் சமுதாயத்தை நிறுவிட தமிழ்நாடு அரசு பாடுபட்டு வருகிறது. எனவே, ஏழை அரிசனங்களும், பழங்குடி மக்களும் இன்னலின்றி வாழ, அரிசன நலத்துறை அயராது பணியாற்றி வருகின்றது என்பதைப் பெருமையோடு கூறிக் கொள்ளலாம்.

# கோழி வளர்ப்பு நிறுவனத்தின் முன்னேற்றம்!

தமிழகத்தில் நவீன ரகக் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தி கோழி முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியைப் பெருக்கவும், பல்வேறு திட்டங்களின் மூலம் நிறைந்த அளவு கோழிப்பண்ணைகள் ஏற்படுத்தி, மக்களின் வருவாயை மேம்படுத்தவும், **தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்** செயல்பட்டு வருகிறது.

**முக்கிய நோக்கங்கள்**

1. கோழி முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி முதலியவற்றை உற்பத்தி செய்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், அவர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களைக் குறைந்த செலவில் கிடைக்கச் செய்தல்.

2. நவீன ரகக் கோழிகளை வளர்த்து, கோழி உற்பத்திப் பொருள்களைப் பன்மடங்காகப் பெருக்குதல்.

3. நவீன முறைக் கோழி வளர்ப்பில் பொது மக்களுக்கு ஆர்வம் ஏற்படுத்தத்தக்க திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்துதல்.

4. கோழிகளுக்குத் தேவையான தரமான கோழித் தீவனம் கிடைக்க வழி வகைகளை மேற்கொள்ளுதல்.

5. நவீன முறை கோழி வளர்ப்புத் தொழில் உபயோகமான தென்பதுடன், மக்களுக்கு இதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கும் என்ற உண்மையை எடுத்துக் காட்டுதல்.

6. ஆர்வமுள்ள உழவர்கள் மற்றும் வேலையற்ற பட்டதாரிகளை நவீன முறை கோழி வளர்ப்பில் ஈடுபடுத்தி, அவர்களுக்குத் தக்க உதவி அளித்தல்.

7. நேரிடையாகவோ அல்லது மற்ற நிறுவனங்களைச் சார்ந்தோ கோழி வளர்ப்பில், உற்பத்தியைப் பெருக்குவதற்கும், உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும், உற்பத்தியான பொருட்களை விற்பதற்கும் வழி வகைகள் செய்து கொடுத்தல்.

8. கோழிப் பண்ணைகள் ஏற்படுத்த மூலதனக் கடனுதவி, தொழில் நுட்ப உதவி முதலியன கிடைக்க ஏற்பாடு செய்தல்.

9. கோழி முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி மக்களுக்கு எளிதில் கிடைக்கும் வண்ணம் அதிக விற்பனை நிலையங்களை ஏற்படுத்துதல். மக்களின் தேவைகளைக் கவனித்து நேரிடையாக அவர்களது இருப்பிடத்திற்கு முட்டைகள் மற்றும் இறைச்சிகளை எடுத்துச் சென்று விற்பனை செய்தல்.

—டாக்டர் எ. பாலகுரு, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்,

## தோற்றம்

தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனம் 12—7—73-ஆம் நாள் தமிழக அரசினரால் ஏற்படுத்தப்பட்டது. இது தமிழ்நாடு அரசு உடைமைக்கு உட்பட்டது. தமிழ்நாடு கால் நடை பராமரிப்புத் துறையின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வந்த அனைத்துக் கோழி வளர்ப்பு மற்றும் விரிவாக்க நிலையங்களும், அத்துடன் இணைந்திருந்த பல்வேறு கோழி வளர்ப்புத் திட்டப் பணிகளும் இந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## செயல் முறை

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் முதன் முதலில் தனது பணிகளை 1. கோழி இனப் பெருக்கத் தொழில் முறை, 2. கோழியின உற்பத்திப் பொருட்கள் விற்பனை முறை என இரு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு பணிகளைச் செயலாற்றத் தொடங்கியது.

## கோழி இனப் பெருக்கப் பணி

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் தரமான கோழிக் குஞ்சுகளை உற்பத்திசெய்து அவைகளை முறையாகப் பல திட்டங்களுக்கு வழங்கி, தனியார் மற்றும் கூட்டுறவுக் கோழிப் பண்ணைகளை ஏற்படுத்துவதுடன் கோழிப் பண்ணைகள் வளர்ச்சிக்காக, தொழில் நுட்ப உதவிகள், மூலதனக் கடனுதவி வழங்குதல் போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இந்த வகையில், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், உலக உணவுத் திட்டம், ஊட்ட உணவுத் திட்டம், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் போன்ற திட்டங்களில் தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனம், கோழியின வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்தி, திட்டப் பணிகளுக்கு ஆக்கபூர்வமாக உறுதுணை புரிந்து வருகிறது.

இத்திட்டத்தின் ஓர் பகுதியாக, தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், தனது நேரிடையான பொறுப்பின்கீழ் கோழிகள் வளர்ப்புப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி இந்த நிறுவனத்தின் கீழ் 10 கோழி வளர்ப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

கோழி வளர்ப்பு நிலையங்களில், தரமான கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு தேவையான காலங்களில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் கோழி இன வளர்ச்சித் திட்டத்திற்குக் கோழிக் குஞ்சுகளும், உற்பத்தியான முட்டைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் நில்லாது கோழிப் பண்ணைகள் ஏற்படுத்துவதில் ஆர்வமுள்ள அனைவருக்கும் இந்நிலையங்களில் தக்க ஆலோசனைகள் வழங்குவதுடன், அவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளும் அளிக்கப்படுகின்றன. கோழி முட்டைகள், கோழி இறைச்சி ஆகியவற்றின் வருங்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, இந்நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் ஒவ்வொரு கோழி வளர்ப்பு நிலையத்திலும் 15,000 கோழிக் குஞ்சுகளுக்குக் குறைவில்லாமல் வளர்க்க வேண்டும் என்ற திட்டத்தின்படி, கோழி வளர்ப்பு நிலையங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் குறியீடு பூர்த்தியானதும், இந்த நிறுவனத்தின் செயல் முறைகளில் விரைவான முன்னேற்றம் ஏற்படும்.

## கோழித் தீவன உற்பத்தி

இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் சென்னை நந்தனத்தில் ஓர் கோழித் தீவன உற்பத்தி நிலையமும், கோவை மாவட்டம் அரசூரில் ஓர் கோழித் தீவன உற்பத்தி நிலையமும் செயல்பட்டு வந்தன. தரமான கோழித் தீவனத்தின் தேவை அதிகமானதால் மேற்கொண்டு, மதுரை மாவட்டத்தில் தே. கல்லுப்பட்டியிலும், கோவை மாவட்டத்தில் திருப்பூரிலும், திருச்சி மாவட்டத்தில் கொட்டப்பட்டு என்ற ஊரிலும் முறையே மூன்று தீவன உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டன.


இந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் தீனிகள் பின்கண்டவாறு விற்கப்படுகின்றன :

1 கிலோ பெரிய கோழித் தீனி விலை—ரூ. 1.00

1 கிலோ கோழிக் குஞ்சுத் தீனி விலை—ரூ. 1.00

கோழித் தீவன உற்பத்தி நிலையங்களில் தரமான தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு, கோழி இன விருத்தி நிலையங்களுக்கு வழங்கப்படுவதுடன், கூட்டுறவு மற்றும் தனியார் பண்ணைகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. மேற்கொண்டு, கோழித் தீவனங்களைப் பரிசோதனை செய்து, அதன் தரத்தை மதிப்பிட ஆய்வுக் கூடம் அமைக்கும் திட்டமும் தீட்டப்பட்டுள்ளது. தற்பொழுது கோழித் தீவன உற்பத்தி போதுமான அளவில் இல்லாததால், அதன் தேவையை இந்த நிறுவனம் ஈடுசெய்ய முடியவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு தீவன உற்பத்தியை மேம்படுத்தவும், குறைந்த விலையில் மக்களுக்குக் கோழித் தீவனம் கிடைக்கச் செய்வதற்குமான வழி வகைகளைத் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது.

**கடந்த 3 ஆண்டுகளில், கோழி வளர்ப்பு நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட கோழித் தீனியின் அளவு பின்கண்டவாறு உள்ளது :**



| ஆண்டு | உற்பத்தியளவு (மெட்ரிக் டன்னில்) |
|---|---|
| 1973—74 (12—7—73 முதல்) | 2,644.561 |
| 1974—75 ... ... | 4,260.488 |
| 1975—76 (நவம்பர் வரை) | 3,587.900 |

### விற்பனை

இந்த நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் கோழியின வளர்ச்சி மற்றும் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தியாகும் முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி முதலியவைகளைத் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோவை, சேலம் ஆகிய இடங்களில் உள்ள தனது விற்பனைப் பிரிவின் மூலம், பொது மக்களுக்கும் அரசுச் சார்பு நிலையங்களுக்கும் விற்பனை செய்து வருகிறது. மேலும், தனியார் கோழிப் பண்ணைகள் மற்றும் கோழிப் பண்ணைகளிலிருந்து கோழி முட்டைகளை விலை கொடுத்து வாங்கி மக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. இந்த நிறுவனம் தனது ஆரம்பக் கட்டப் பணிகளைப் பூர்த்தி செய்து வருவதால், மக்களின் தேவைகளை எளிதில் பூர்த்தி செய்து பல சிரமங்களை எதிர் நோக்கியுள்ளது. இதனை மனதில் கொண்டு, முதல் கட்டமாக மாதந்தோறும் 6,000 கிலோ கோழி இறைச்சியையும், நாள் தோறும் சுமார் 1 இலட்சம் முட்டைகளையும் விற்பனைப் பிரிவில் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இத்தேவைகளை நிறைவு செய்ய இந்த நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் கோழி வளர்ப்பு நிலையங்களில் 50,000 கோழிக் குஞ்சுகளுக்குக்குறைவில்லாமல் விநியோகிக்கவும், 2,25,000 கோழிகளை ஆண்டு தோறும் இறைச்சிக்காக ஒதுக்கவும் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.



தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்பட்ட கோழி முட்டைகளின் விவரம் வருமாறு:

| ஆண்டு | விற்பனை செய்யப்பட்ட முட்டைகள் | |
|---|---|---|
| | சென்னை நகரில் | தமிழ்நாட்டில் |
| 1973—74 (12-7-73 முதல்) | 35,94,483 | 65,91,924 |
| 1974—75 | 71,27,190 | 1,23,02,028 |
| 1975—76 (நவம்பர் முடிய) | 68,91,656 | 1,29,96,826 |

### கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையங்கள்

தற்பொழுது காட்டுப்பாக்கம் (செங்கற்பட்டு மாவட்டம்), கப்பலூர் (மதுரை மாவட்டம்), ஓசூர் (தருமபுரி மாவட்டம்) ஆகிய 3 இடங்களில் கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையங்கள் செயல்படுகின்றன. இவைகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகளின் எண்ணிக்கை பின்வருமாறு உள்ளது :

### உற்பத்தி செய்யப்பட்டக் கோழிக் குஞ்சுகள்

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1973—74 (12-7-73 முதல்) | 2,95,771 |
| 1974—75 ... ... | 4,35,711 |
| 1975—76 (நவம்பர் முடிய) | 2,62,779 |

### எதிர்காலத் திட்டங்கள்

வீரிய இனக் கோழிகளின் உற்பத்தித் திறனை மக்கள் நன்முறையில் பரவலாகப்பெறும் பொருட்டு, இந்நிறுவனம் அதிகப்படியாக வீரிய இனக் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்யத் திட்டம் தீட்டியுள்ளது. தனியார் துறையில் வழங்கப்படும் வீரிய இனக் கோழிக் குஞ்சுகள் ஏழைக்கு எட்டாத விலையில் உள்ளன! காரணம், அந்தக் கோழிக் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் தமிழ்நாட்டில் இல்லை. அந்த நிலையை மாற்ற, இந்நிறுவனம் வீரிய இனக் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் குஞ்சு பொரிக்கும் நிலையங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது. தற்பொழுது செயல்பட்டு வரும் 3 கோழிக் குஞ்சு உற்பத்தி நிலையங்களிலும் உற்பத்தியை மும்மடங்காக மும்முரப்படுத்துவது திட்டமாகும்.

கோழித் தீவனத்திற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையை மாற்றி தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, மேற்கொண்டு 3 தீவன உற்பத்தி நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

செயல்பட்டு வரும் கோழித் தீவன உற்பத்தி நிலையங்களில் 1,450 மெட்ரிக் டன்

அளவிற்குத் தீவன உற்பத்தி செய்ய, செயல் முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

விற்பனைப் பிரிவின் கீழ், நாளொன்றுக்கு ஒரு இலட்சம் முட்டைகள் விற்பனை செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது. முட்டை விலையைக் குறைக்க ஆந்திர மாநிலத்திலிருந்து முட்டைகளை வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொது மக்களின் தேவைக்கேற்ப மாதந்தோறும் 6,000 கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

செயல்பட்டு வரும் கோழி வளர்ப்பு விரிவாக்க நிலையங்கள் ஒவ்வொன்றும் 50,000 கோழிக் குஞ்சுகளுக்குக்குறைவில்லாமல் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

புறக்கடைக் கோழிப்பண்ணைத்திட்டத்தை தீவிரப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் திட்டம்**

படித்து முடித்து வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கொடுக்கும் திட்டத்தின் கீழ், கோழி அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் கோழிப்பண்ணைகளை அமைத்துக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது, இந்தத் திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்குத்தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகக் கடனுதவி அளிக்கப்படும். இந்தத் திட்டத்தில் சேரும் பட்டதாரிகளைத் தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனமும் சம்பந்தப்பட்ட வங்கியும் தேர்வு செய்து, அவர்களுக்குக்கோழி வளர்ப்புப்பற்றி 1 மாத பயிற்சிக்குப் பின் 500 பட்டதாரிகளுக்குக் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தி அதன் மூலம் குறைந்தது 5,00,000 முட்டைகள் உற்பத்தி செய்ய வேண்டும் என்பது இந்தத் திட்டத்தின் அடிப்படைநோக்கமாகும். மேற்கொண்டு 2,25,000 கோழிகள் இறைச்சிக்காக உற்பத்தி செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் கூட்டுறவு முறையில் 20 பிரிவுகளாக, ஒவ்வொரு பிரிவும் 10,000 கோழிகளைக் கொண்டதாக ஏற்படுத்தப்படும். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு மூலதனச் செலவுக்காக ஒவ்வொருவருக்கும் ரூபாய் 15,000 கடன் வழங்கப்படும்.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் மேற்கூறிய பணிகளால், தமிழக மக்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த முட்டையும், இறைச்சியும் குறைந்த செலவில் கிடைத்திடும் என்பது திண்ணம்.


தந்தி : ''கோஆப்பாங்கு'' தபால் பெட்டி எண் : 324 தொலைபேசி எண் : 4189

**திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கு**

**(வரையறுக்கப்பட்டது) எண். 178 : : திருச்சிராப்பள்ளி - 2.**

துணைப் பெருந்தலைவர் : **என். பாலன், பி.ஏ., பி. எல்.,**

**கிளைகள் :** 1. கரூர், 2. அரியலூர், 3. துறையூர், 4. மணப்பாறை, 5. லால்குடி, 6. பெரம்பலூர், 7. தில்லைநகர் (திருச்சி), 8. ஜெயங்கொண்டம், 9. குளித்தலை, 10. வேலாயுதம்பாளையம், 11. முசிறி, 12. சின்னதாராபுரம், 13 மண்ணச்சநல்லூர், 14. தொட்டியம், 15. ஸ்ரீரங்கம், 16. திருவரம்பூர், 17. சுப்ரமணியபுரம் (திருச்சி), 18. கரூர் (கிழக்கு) 19. துவரங்குரிச்சி, 20. வையம்பட்டி, 21. ஆண்டிமடம், 22. அரவாக்குரிச்சி, 23. செந்துறை, 24. திருமானூர், 25. அரும்பாவூர்.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | 100.25 | இலட்சங்கள் |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | 85.56 | |
| அலுவல் நிதிகள் | 1,035.65 | |
| டிபாசிட்டுகள் | 565.43 | |

| | | |
|---|---|---|
| 61 மாதங்களும் அதற்கு மேலும் .. | ரூ. 10.50 % | **தவணை வைப்புகளின் வட்டி விகிதங்கள்** |
| 36 மாதங்கள் முதல் 61 மாதங்களுக்குள் | 9.50 % | |
| 12 ,, ,, 36 ,, | 8.50 % | |
| 9 ,, ,, 12 ,, | 7.50 % | |
| 6 ,, ,, 9 ,, | 6.50 % | |
| 91 நாட்கள் முதல் 6 மாதங்களுக்குள் | 6.00 % | |

வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப மாதாந்திர வட்டியும் வழங்கப்படும்.


| | | |
|---|---|---|
| **கால இட்டு வைப்புகள்** | 46 நாட்கள் முதல் 91 நாட்களுக்குள் | 4.00 % |
| | 15 நாட்கள் முதல் 46 நாட்களுக்குள் | 3.50 % |
| | சேமிப்புக் கணக்கு | 6.00 % |
| | பாதுகாப்பு வைப்பு | 10.00 % (கூட்டு வட்டி) |
| | மாதாந்திர வைப்பு | 8% முதல் 10.25 % வரை |

**எங்கள் வங்கியிலும் அருகாமையிலுள்ள எங்கள் வங்கிக்கிளைகளிலும், முதலீடு செய்து உச்ச அளவு பயன் அடையுங்கள்.**

**அ. ஞானப்பிரகாசம், பி. ஏ.,**
**இணைப்பதிவாளர், தலைமை நிர்வாக அதிகாரி.**

**ஆர். சோமசுந்தரம், பி. ஏ.,**
செயலாளர் (பொறுப்பு)

# தமிழகத்தில் கதர் கிராமக் கைத்தொழில் வளர்ச்சி



தமிழ்நாட்டில் கதர் கிராமக் கைத்தொழில் வளர்ச்சியில் புதிய மறுமலர்ச்சியே உருவாகியுள்ளது. கிராமங்களிலுள்ள வேலையற்றோருக்கும், குறைந்த வேலை வாய்ப்புள்ளோர்க்கும் பெருமளவில் வேலை வாய்ப்பளிக்கவும், விவசாயிகளின் வருவாயை அவர்களது ஓய்வு நேரத்தில் நூல் நூற்பதன் மூலம் அதிகரித்துக் கொள்ளவும், கிராமக் கைத்தொழில்களை ஊக்குவிக்கவும், அதன் மூலம் கிராமப்புறங்களில் தன்னிறைவுச் சமுதாயத்தை அமைக்கவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் இயங்கி வருகிறது.

கதர் கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு என கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இவ்வாரியத்திற்கு மானியங்களும், கடன் உதவிகளும் வழங்கி வருகிறது. வணிகத் துறையல்லாத பணிகளில் ஏற்படும் இழப்பினை ஈடுபடுத்தும் வகையிலான அடக்கச் செலவு மானியத்தையும் இவ்வாரியத்திற்குத் தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது.


வாரியத்திற்குட்பட்ட நிலையங்கள் மூலமும், கூட்டுறவு நிறுவனங்கள் மூலமும் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு முழுவதும் கதர் கிராமத் தொழில் பொருள்களை உற்பத்தி செய்வதற்கென 594 வாரிய நிலையங்களும், 2,435 கூட்டுறவு நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.

பாரம்பரியத் தொழில் வினைஞர்களின் வருவாயை அதிகரிக்கவும், வேலை வாய்ப்பைப் பெருக்கவும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பல்வேறு புதுத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. இவ்வாரியம் மின் விசைச் சக்தியினைக் கொண்டு இயங்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கிறது என்று மக்களிடையே பரவியிருக்கும் தவறான எண்ணத்தினை நீக்கி வருகிறது.



எங்கெங்கு மின் விசைச் சக்தியினைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் வினைஞர்களின் ஊதியத்தைப் பெருக்க முடியுமோ, அங்கெல்லாம் மின் விசைச் சக்தியினைப் பயன்படுத்தி வருகிறது. மேலும், இதனால் எவரும் வேலை வாய்ப்பினை இழக்க நேரிடாமலும் பார்த்துக் கொள்கின்றது. நூற்புத் தொழிலில் பஞ்சடித்தல், பட்டை போடுதல் போன்ற நிலைகளிலும், எண்ணெய் பிழிதல், மட்பாண்டச் சக்கரம் போன்றவற்றிலும் மின்சக்தி பயன்படுத்தப்படுகின்றது. இதன் பலனாகக் கிராமத் தொழில்கள், நிதியுதவி அளிக்கும் நிறுவனங்களின் உதவியுடன், பெருமளவு படித்த வேலை

யற்றோரை ஈர்க்கக் கூடும். கதர் கிராமத் தொழில்களைப் பெரும் பாலான மக்கள் தங்களது தொழிலாக ஏற்றுக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையும் பிறந்துள்ளது.



**கதர் உற்பத்தி**

*193* உற்பத்தி நிலையங்கள் மூலமும், 5 கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் பரவலாகக் கதர் உற்பத்தி நடைபெற்று வருகிறது. நூற்போர்களிடமிருந்து வாங்கிய நூலினை நெசவாளர்களுக்குத் துணி நெசவு செய்ய இந்நிலையங்கள் மூலம் கொடுக்கப்படுகிறது. நெய்த துணியினை வாரத்துக்கு ஒரு முறை பெற்று அதற்கான ஊதியம் அவர்களுக்குக்கொடுக்கப் படுகிறது.

தற்போது ஆறு கதிர் புது மாதிரி ராட்டை பெருமளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதைப் போன்ற 25 ராட்டைகளும், பஞ்சுடைத்துப் பட்டை போடுதல் போன்றவையும் கூடிய ஓர் அமைப்பு கிராமிய நூற்பு நிலையமாகும். இத்தகைய முதல் நிலையம் 1966-ஆம் ஆண்டு துவக்கப்பெற்றது. தற்பொழுதுள்ள நிலையங்களில் 7,528 தொழில் வினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இப்பணியில் ஈடுபடும் தொழில் வினைஞர், நாள் ஒன்றுக்கு ரூ. 2.50 முதல் ரூ. 3 வரை ஊதியம் பெறமுடியும்.



*1973—74*-ல் *2,311* நெசவாளர்கள் துணி உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். தற்பொழுது ஏறத்தாழ *3,000* பேர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டு அவர்கள் உற்பத்தி செய்த துணியின் மதிப்பு ரூ. 160 இலட்சங்களாகும். இதற்கு முந்திய ஆண்டு 103 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணி உற்பத்தி செய்யப்பட்டது. தேவையான பருத்தி வாங்குவதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளன. உற்பத்தியாகும் எல்லா நூல்களையும் பயன்படுத்தும்வகையில் தறிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**கிராமத் துணி உற்பத்தி நிலையங்கள்**

வளர்ந்து வரும் ஆராய்ச்சிகளையும், தொழில் நுட்ப மேம்பாடுகளையும் மின் சக்தியுடன் பயன்படுத்தி இந்நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. இவை தற்பொழுது கோவை மாவட்டத்தில் சூலூர், பெருமாநல்லூர் ஆகிய இடங்களில் முன்னோடித் திட்டங்களாகச் செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராமத் துணி உற்பத்தி நிலையமும் 68 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். நாளொன்றுக்கு இவர்களுக்கு 2.50 ரூபாயிலிருந்து 8.00 ரூபாய் வரை ஊதியம் கிடைக்கும். இதனால் குறைந்த முதலீட்டுடன் பெருமளவு மக்கள் வேலைவாய்ப்பினைப் பெறவும் வழி ஏற்படுகிறது. மேலும் ஏற்கெனவே மக்கள் பெருக்கத்தால் அவதியுறும் நகர்ப்புறங்களில் கிராம மக்கள் சென்று குடியேறுவதையும் தவிர்க்கிறது. இவ்வாரியம் கதர் பட்டுத் துணிகளையும் உற்பத்தி செய்கிறது.

இவ்வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் தமிழ் நாடு முழுவதும் அமைக்கப்பட்டு உள்ள 188 கதர் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னையில் இரண்டும், திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் நான்கு முதல் நிலைக் கதர் கிராஃப்டுகள் இயங்கி வருகின்றன. மொத்தம் 243 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர் இவ்வாண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. நூற்பவர்கள், நெசவாளர்கள், நூல் சுற்றுபவர்கள், சாயம் ஏற்றுபவர்கள், சலவை செய்பவர்கள், தையற்காரர்கள் போன்ற சுமார் 1 இலட்சம் பேருக்கு கதர்த்திட்டம் வேலை வாய்ப்பளித்து வருகிறது. இவர்கள் ஒரு ஆண்டில் 72.09 இலட்சம் ரூபாய் அளவிலான ஊதியத்தைப் பெற்று வருகிறார்கள். இம்மாநிலத்திலுள்ள விற்பனை நிலையங்களில் உடனடியாக விற்கப்படுவதற்கேற்ற சரக்குகளை உற்பத்தி செய்வதே இவ்வாரியத்தின் கொள்கையாகும். இவ்வாரியம் இம்மாநிலத்திற்கு வெளியிலும் மற்ற நிறுவனங்களிடமிருந்தும் வாங்குவதை



முடிந்த அளவில் குறைத்து வருகிறது.

கிராமப் புறங்களில் நிலவும் ஏழ்மையை ஒழிக்கவும், ஆங்காங்கு இருக்கும் மனித சக்தி மற்றும் பொருள் வளங்களைப் பயன்படுத்தவும், கிராமப் புறங்களிலுள்ள மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிராமத் தொழில் திட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

கீழ்க்காணும் கிராமத் தொழில் திட்டங்களை வாரியத்திற்குட்பட்ட நிலையங்கள் மூலமாகவும், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்துமாறு ஆணையிடப் பட்டுள்ளது.

1. கதர்
2. பனை வெல்லம்.
3. எண்ணெய்.
4. தோல்.
5. உணவுக்குப் பயன்படாத எண்ணெய் மற்றும் சோப்பு
6. வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை
7. மட்பாண்டம்.
8. கைக்குத்தலரிசி மற்றும் பருப்பு வகைகள்.
9. தேனீ வளர்ப்பு.
10. கையால் செய்யப்படும் காகிதம்.
11. செங்கல் மற்றும் ஓடுகள்.
12. சுண்ணும்பு.
13. கற்ருழை நார்.
14. மரவேலை மற்றும் கருமார் தொழில்.
15. கிராமப்புறத்தீப்பெட்டித் தொழில்.
16. சாண எரிவாயு.
17. பழங்கள் பதப்படுத்தல்.
18. அரக்கு உற்பத்தி.
19. பிரம்பு மற்றும் மூங்கில் உற்பத்தி.
20. அலுமினியப் பாத்திரங்கள் உற்பத்தி.
21. மருந்துகள் செய்யக் காட்டிலுள்ள மூலிகைகள் மற்றும் கனி வகைகளைச் சேகரித்தல்.
22. பற்பொடி தயாரித்தல்.
23. வாசனை ஊதுபத்தி.
24. சிகைக்காய்த் தூள்.

கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு அளிக்கும் நிதியுதவியின் அளவைக் கருத்திற் கொண்டு மாநில அளவில் கிராமத் தொழில் திட்டங்கள் முடிவு செய்யப்படுகின்றன. மாநில அரசு, மானியமும், சிறப்புத் திட்டங்களுக்காக குறுகிய காலக் கடன் உதவியும், நிதி உதவியாக அளித்து வருகிறது.

## பனை வெல்லம்

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 4 கோடி பனை மரங்கள் உள்ளன. கன்னியாகுமரி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோவை மாவட்டங்களில் இயல்பாக நிலவி வரும் இத்தொழிலில் சுமார் இரண்டு இலட்சம் பேர் ஈடுபட்டு உள்ளனர். இவர்கள் பதநீர் இறக்குதல், வெல்லம் காய்ச்சுதல், பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தி செய்தல், பனந்தும்பு தயாரித்தல், பிரஷ் செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு உள்ளனர். தமிழ்நாடு முழுவதும் பரவலாக பல ஆரம்ப நிலைக் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவ்வாரம்ப நிலைக் கூட்டுறவு நிலையங்கள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் சம்மேளனங்களாக இணைந்துள்ளன. பதநீர் இறக்குவதற்கென மரமேறும் தொழிலாளர்களுக்கு விபத்துக்கள் ஏற்பட்டால் அவர்களுக்குப் பொருளுதவி கொடுக்கப் படுகிறது. இதன்படி சிறு விபத்துக்குள்ளானேருக்கு ரூ. 100-ம், பெரும் விபத்துக்குள்ளானேருக்கு ரூ. 500-ம், உயிரிழப்போர் குடும்பத்துக்கு ரூ. 1,000-ம் கொடுக்கப் படுகிறது.


பதநீர் இறக்கும் தொழில் அபாயகரமானதும், தொல்லைகள் நிறைந்ததுமாகும். இந்த அபாயத்தைத் தவிர்க்கும் முறையில் சாதனமொன்றை உருவாக்குவதும் மிகவும் அவசியமானதொன்று அபாயமின்றியும், சுலபமாகவும் மரமேறவும், அதிகப்படியான பதநீரைப் பெற்று வருவாயை உயர்த்திக் கொள்ளவும், சிறந்ததோர் சாதனத்தைக் கண்டு பிடித்துக் கொடுப்போருக்கு கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு அளிக்க முன்வந்துள்ளது.

பதநீரை வெல்லமாகக் காய்ச்சும் போது பெருமளவில் எரிபொருள் செலவிடப்படுகிறது. 'மெராடோ' நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் இவ்வாரியம் குறைந்த அளவு எரிபொருளைப் பயன்படுத்தி வெல்லம் காய்ச்ச ஓர் உலையினை உருவாக்க ஏற்பாடுகள் செய்து வருகிறது. இவ்வாரியத்தின் ஓர் உறுப்பான மாநிலப் பனைவெல்லச் சம்மேளனம் இங்கிலாந்து, ஜப்பான், மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு 20.00 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பனந்தும்புகளை ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நாடுகள் இத்தும்புகளைப் பயன்படுத்தி பிரஷ்கள் உற்பத்தி செய்கின்றன. கச்சாப் பனந்தும்புக்குப் பதில் பிரஷ்களாகவே ஏற்றுமதி செய்வதற்கெனப் பிரஷ்கள் செய்யும் சில நிலையங்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

## எண்ணெய்த் தொழில்

எண்ணெய் பிழியும் தொழிலில் எக்ஸ்பெல்லர்கள், ரோட்டரிகள் ஆகிய புதுவகை இயந்திரங்கள் நுழைந்ததன் காரணமாக கிராம எண்ணெய்ச் செக்குகள் அழியும் தறுவாயிலிருந்தன. கதர் வாரியம் இத்தொழிலாளர்களுக்கு மீண்டும் நல்வாழ்வு அளிக்கும் பொருட்டு 191 எண்ணெய்க் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவியுள்ளது. இதில் 3,500 எண்ணெய் பிழிவோர் ஈடுபட்டுள்ளனர். இச்சங்

# காதி கிராப்ட்




உடல் மணக்க 'குறிஞ்சி' சோப். உடை வெளுக்க 'கோபுரம்' சலவை சோப். தித்திக்கும் தூய தேன். 'அக்மார்க்' செக்கெண்ணெய். தோல் காலணிகள், கைப்பைகள். வீட்டை அலங்கரிக்க கலைப் பொருட்கள். தினசரி உபயோகத்திற்கு பிரம்பு, மூங்கில், மற்றும் பனைப் பொருட்கள். வேலைப்பாடு மிக்க மட்பாண்டங்கள். அழைப்பு விடுக்க கைக் காகிதங்கள். மலிவு தீப்பெட்டிகள். கதர் பருத்தி, கதர் சில்க் துணிவகைகள். இவற்றை வாங்கி மகிழ்வீர்.

கிராமக் கைவினைஞர்கள் நல்வாழ்வு பெற அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்குவீர்.

தரமானது ... மலிவானது ... இவை வாங்கிட
தமிழகமெங்கும் 180 காதி கிராப்ட்கள்.

**காதி கிராப்ட்**

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம்,
'குறளகம்', எஸ்ப்ளனேடு, சென்னை-600 001.

KK/381

கங்கள் இவ்வாரியம் அளிக்கும் நிதியுதவியைக் கொண்டு எண்ணெய் வித்துக்களை ஏற்ற காலத்தில் விலைக்கு வாங்கி அதன் உறுப்பினர்களுக்கு எண்ணெய் பிழியக் கொடுக்கிறது. பதிலுக்கு, பிழிந்த எண்ணெயைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறது. சில சங்கங்களில் எண்ணெய் பிழிவதற்கென ஊதியம் அளிக்கும் முறை பின்பற்றப்படுகிறது. இச்சங்கங்களில் 1973—74-ஆம் ஆண்டில் 260 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள எண்ணெய்யும், பிண்ணாக்கும் உற்பத்தி செய்யப்பட்டன. கிராமத்திலுள்ள எண்ணெய் பிழிவோர், எருதுகளால் இயக்கப்படும் செக்குகளைப் பராமரிக்க அதிகம் செலவாவதைத் தற்போது உணர்ந்து வருகின்றனர். பராமரிப்புச் செலவு அதிகமாக இருப்பதால் இத்தொழிலை விட்டுவிடும் நிலைக்கும் சிலர் ஆளாகியுள்ளனர். ஆகவே, கதர் ஆணைக் குழு, எண்ணெய், பிழிவதற்கென மின்சாரத்தில் இயங்கும் புது முறைச் செக்கினை உருவாக்கியுள்ளது. இச்செக்கில் எண்ணெய், மின்சாரம் மூலம் பிழியப்பட்டாலும் உணவுச் சத்து பாதிக்கப்படாமல் காப்பாற்றப்படுகிறது. எருதுகளால் சுற்றப்படும் அதே வேகத்தில் மின்சார மோட்டார், செக்குகளை இயக்குகிறது. முன்பு 130 மின்விசை எண்ணெய்ச் செக்குகளுக்குமேல் நிறுவப்பட்டுள்ளன. 1974—75-ஆம் ஆண்டு மேலும் இத்தகைய 100 செக்குகள் நிறுவப்பட்டுள்ளன. கதர் வாரியம் மின் விசை எண்ணெய்ச் செக்குகளைத் தனது கிளைகளின் மூலமே பெருமளவு உற்பத்திச் செய்யத் திட்டமிட்டு உள்ளது.

## தேனீ வளர்ப்பு

விவசாயிகளுக்குத் தேன் பெட்டிகள் பாதி விலையில் கொடுக்கப்படுகிறது. இப்பெட்டிகளில் சேகரிக்கப்படும் தேன் அதற்கெனப் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விலைக்கு வாங்கப்படுகிறது. தேன் கூடுகள் அதிகப்படியாக உள்ள இடங்களில் இது போன்ற 32 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் தேன் வளர்ப்போரிடம் தேனை வாங்கி, பக்குவப்படுத்தி, புட்டிகளில் அடைத்து மக்களுக்கு விற்கிறது. இவ்வாண்டு 60 இலட்சம் ரூபாய் மதிப்புக்கும் அதிகப்படியான தேன் உற்பத்தியாகியுள்ளது.

## சோப்புத் தொழில்

உணவிற்குப் பயன்படாத எண்ணெயைப் பயன்படுத்தி, சோப்புத் தயாரிக்கும் திட்டத்தினை இவ்வாரியம் ஏற்றுள்ளது. தற்போது உணவுக்குப் பயன்படாத எண்ணெய் வித்துக்கள் பெரும்பாலும் வீணாக்கப்படுகின்றன. உணவுக்குப் பயன்படாத எண்ணெய் வித்துக்கள் சேகரிப்பதற்கெனக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச்சில உதவிகளை வாரியம் அளிக்கிறது. தற்பொழுது 29 வாரியச் சார்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1973—74-ஆம் ஆண்டு இவற்றின் மூலம் 41.30 இலட்ச ரூபாய் மதிப்புள்ள சோப்பு உற்பத்தி செய்யப்பட்டது. 1974—75-ஆம் ஆண்டு 50 இலட்சம் ரூபாய் மதிப்புக்கும் அதிகமான சோப்பு



உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாரியத்தின் 'கோபுரம்' சோப்புக்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. வளர்ந்து வரும் இத்தேவையினை மனத்திற் கொண்டு இவ்வாரியம் வாசனைக் குளியல் சோப்புஒன்றினைத் திருக்கழுக்குன்றத்தில் நிறுவியுள்ளது. அண்மையில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் இந்தச் சோப்புக்கு மக்களிடையே நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது.

## மண்பாண்டத் தொழில்

மட்பாண்டத் தொழிலிலும் 280 தொழில் கூட்டுறவுகளும், 3 வாரியச் சார்பு நிலையங்களும் ஈடுபட்டுள்ளன. இத்தொழிலில் பதினோராயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஓர் ஆண்டில் மொத்தம் 13.76 இலட்சம் ரூபாய்கள் ஊதியமாகப் பெறுகிறார்கள். இவர்களின் ஊதிய அளவு தற்போது அதிகரித்து வருகிறது.

## கையால் செய்யப்படும் காகிதம்

வாரியச் சார்பு நிலையங்கள் ஏழும், கூட்டுறவு முறையில் நடத்தப்படும்எட்டுச்சங்கங்களும் இக்காகிதத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. தற்போது இக்காகிதங்களுக்கும், காகித அட்டைகளுக்கும் மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

இவ்வலகுகளில் உற்பத்தியாகும் காகிதம், எழுதுவதற்கும் அட்டைப் பெட்டிகள் செய்வதற்கும்உபயோகப்படுத்தப்படுகிறது. இதுவரை உபயோகித்து வந்த மூலப் பொருள்களாகிய அச்சகக் கழிவுத் தாள்கள், தையல் கழிவுத் துணிகள், பனியன் துண்டுகள் விலையேறிவிட்டதால் அவைகளுக்குப் பதிலாக விவசாயக் கழிவுப் பொருள்களாகிய கரும்புச் சக்கை, வைக்கோல், உமிபோன்ற பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவைகள் தனியாகவோ அல்லது முன்னால் உபயோகித்து வந்த மூலப் பொருள்களுடன் கலந்தோ உபயோகிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ இரண்டரை இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து சுமார் 1,032.61 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்வதற்கென இவ்வாரியத்தின் கீழ் 256 வாரியச் சார்புள்ள நிலையங்களும், 2,430 தொழில் கூட்டுறவுகளும் இயங்கி வருகின்றன.

## வேலைவாய்ப்பு அதிகரிக்கும் திட்டம்

படித்து வேலையற்றிருப்போருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதைக் கருத்திற் கொண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கீழ்க்காணும் ஐந்து திட்டங்களை உருவாக்கியுள்ளது.

1. 100 கிராம நூற்பு நிலையங்கள் அமைத்தல்.
2. 200 மின்விசைஎண்ணெய்ச் செக்குகள் அமைத்தல்.
3. 50 பனந்தும்பு பிரஷ் நிலையங்கள் அமைத்தல்.
4. 20 சோப்பு உற்பத்தி நிலையங்கள் அமைத்தல்.
5. கையால் செய்யப்படும் 20 காகித உற்பத்தி நிலையங்கள் அமைத்தல்.

## பர்மா மற்றும் இலங்கை அகதிகள் மறுவாழ்வுத் திட்டம்

இந்திய நாட்டிலிருந்து சென்று பர்மா மற்றும் இலங்கை நாடுகளிலிருந்து திரும்பி வரும் அகதிகள் மறுவாழ்வுக்கென அகதிகள் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கியிடம் சில திட்டங்களை இவ்வாரியம் அளித்துள்ளது. இவ்வங்கி 5 கிராம நூற்பு நிலையங்கள், 5 தீப்பெட்டித் தொழிற்சாலைகள், 5 மின் விசைச் செக்குகள் முதலியவை துவக்குவதற்காக 5 இலட்சம் ரூபாய் அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது.



உழவர் பெருமக்களுக்கு
தமிழ்நாடு அரசு
வேளாண்மைத் துறையின்
புத்தாண்டுப் பரிசு !!!
படலை கே.எம்.1
கம்பு கே.எம்.1
கம்பு கே.எம்.2
ஆடுதுறை 31
பூசா 33
ஐ.இ.டி 1722
நெல் டி.கே.எம் 8
கரும்பு கோ.க.671

# தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர்களுக்கு இலாகாக்கள் பங்கீடு விவரம்



திரு. பி. கே. தவே

தமிழ்நாட்டில் ராஷ்டிரபதி ஆட்சியை அமல் நடத்தும் பிரகடனம் 31-1-76 இரவு வெளியிடப்பட்டதையொட்டி மத்திய பெட்ரோலியம் இலாகா செயலாளர் திரு. பி. கே. தவேயும், மின்சார இலாகா செயலாளர் திரு. ஆர். வி. சுப்பிரமணியமும், தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆலோசகர்கள் இருவருக்கும் கீழ்க்கண்டவாறு இலாகாக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.



திரு. ஆர். வி. சுப்பிரமணியன்

**திரு. பி. கே. தவே**

பொது நிர்வாகம்,
ஐ. ஸி. எஸ்., ஐ. ஏ. எஸ்.,
அதிகாரிகள்,
மாவட்ட வருவாய்த் துறை
அதிகாரிகள் பற்றிய விஷயங்கள்
போலீஸ்,
தேர்தல்கள்,
மது விலக்கு,
எக்சைஸ்,
ஆட்சிமொழி,
சட்டசபை,
ரெவின்யூ போர்டு,
மாவட்ட வருவாய்த் துறை
அலுவலகங்கள்
டெபுடி கலெக்டர்கள்,
பூதான்,
கிராமதான்,
கைத்தறிகள்
சட்டம்,
கோர்ட்டுகள்,
சிறைகள்,
ரிஜிஸ்ரேஷன்,
நிலச் சீர்திருத்தம்,
இடவசதிக் கட்டுப்பாடு
மோட்டார் வாகனங்கள் வரி,
வணிக வரி,
கடன் கொடுப்பது பற்றிய
சட்டம்,
கிராமப்புற கடன்கள்,
சீட்டு கம்பெனிகள் சட்டம்,
சினிமா சட்டம்,
நகர சபைகள் நிர்வாகம்.
சமுதாய அபிவிருத்தி,
பஞ்சாயத்துக்கள்,
பஞ்சாயத்து யூனியன்கள்,
எழுதுபொருள்கள்,
அரசினர் அச்சகம்
மக்கள் தொடர்பு
செய்தித்துறை,
பிலிம் நுட்பம்,
இளைஞர் சேவை,
சீரணிகள்,
வெளிநாடுகளிலுள்ள
இந்தியர்கள்,
அகதிகள்,
பத்திரிகை காகித கண்ட்ரோல்,
பாஸ்போர்ட்டுகள்

**திரு. ஆர். வி. சுப்பிரமணியன்**

நிதி,
திட்டமிடுதல்,
பின்தங்கிய வகுப்பினர்,
நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி,
சுற்றுலா வாரியம்,
சுகாதாரம்,
வைத்தியம்,
நகர்ப்புற திட்டங்கள்,
குடிநீர் வாரியம்,
பொதுப்பணித்துறை,
சிறிய நீர்ப்பாசனங்கள்,
நெடுஞ்சாலைகள்,
துறைமுகங்கள்,
உணவு,
துணி,
நூல்,
தொழிற்சாலைகள்,
இரும்பு,
உருக்கு,
உலோகக் கனிகள் கட்டுப்பாடு
கம்பெனிகள்,
மின்சாரம்,
கூட்டுறவு,
வீட்டுவசதி
குடிசைமாற்று வாரியம்,
தொழிலாளர் நலம்,
போக்குவரத்து,
புள்ளிவிவரங்கள்,
வேலைவாய்ப்பு,
சமூகநலம்,
மீன்வளம்,
பிச்சைக்காரர் விடுதிகள்,
வனங்கள்,
கால்நடை,
அறக்கட்டளைகள்,
கதர்,
கிராமத் தொழில்கள்,
கிராமப்புற கைத்தொழில்
திட்டங்கள்,
பால்வளம்,
வெள்ளக் கட்டுப்பாடு,
ஹரிஜன முன்னேற்றம்,
வக்ப் போர்டு,
விவசாயம்,
உணவு உற்பத்தி,
விவசாய என்ஜினிரிங் பிரிவு,
விவசாய என்ஜினிரிங் மற்றும்
சேவைக் கூட்டுறவு சங்கங்கள்.

ஜெய்—..

கட்டுரை





# தியாகத் தலைவருக்கு நினைவகம்

தியாகச் சுடர் காமராஜரின் நினைவினை நாட்டிற்கு எடுத்துக் காட்டும் விதத்தில் கிண்டியில் அமைக்கப்பட்டுள்ள நினைவகத்தினை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் திறந்து வைத்தது நினைவகத்திற்கு மேலும் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

காமராஜர் நினைவகத் திறப்பு விழா 14-2-1976-ஆம் நாளன்று மிகவும் சீரும் சிறப்புமாக நடந்தேறியது. விழாவில் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் தலைமை வகித்தார். அப்பொழுது அவர் பேசுகையில், ''கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகிய பண்புகளை பிரதமர் போற்றி வருவது போலவே, காமராஜரும் மேற்படி பண்புகளைப் போற்றி, அதற்கு முக்கியத்துவம் அளித்து வந்தார். காரணம், கட்டுப்பாடு, ஒழுங்கு இல்லாமல் ஜனநாயகம் இல்லை.

''மக்களின் கண்மணி'' காமராஜர் மறைவினால் தமிழ்நாட்டிற்கு மட்டும் இழப்பல்ல; ஒரு மக்களின் தலைவனை நாடே இழந்திருக்கிறது; ஒரு சிறந்த நிருவாகியை நாடு இழந்துள்ளது. சிறந்த அறிவாளியும், 'இரும்பு உள்ளம்' படைத்த மக்கள் தலைவனும், சிறந்த ராஜதந்திரியுமான ஒருவரை நாடு இழந்திருக்கிறது. பெருந்தலைவர் காமராஜரைப் போலவே நாட்டு மக்கள் தொண்டிற்காக, தம்மைத்தாமே அர்ப்பணித்துக் கொண்டு உழைப்பதே அவருக்கு நாம் செய்யக்கூடிய சிறந்த அஞ்சலியாகும்'' என்று குறிப்பிட்டார்.

காமராஜரின் நினைவகத்தைத் திறந்து வைத்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தம்முடைய உரையில்,

**உண்மையான நினைவுச்சின்னம்**

''நம்முடைய பெருந்தலைவர் காமராஜ் நினைவாலயத்தைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பெருந்தலைவர் காமராஜின் கொள்கை, குறிக்கோளைப் பின்பற்றி நடப்பதே அவருக்கு எழுப்பப்படும் உண்மையான நினைவுச் சின்னம் ஆகும்.

''அயராத உழைப்பு, மக்கள் பிரச்சினையைப் பற்றியே ஓயாத சிந்தனை, சமுதாயத்தில் பலவீனமானவர்களை உயர்த்த அவர் மேற்கொண்ட கடின உழைப்பு ஆகியவற்றின் மூலம் உயர்ந்த மக்கள் தலைவராக காமராஜ் போற்றப்பட்டார். அவர் எந்த உயர் பதவியை வகித்த போதிலும் பாமர மக்களிடம் நெருங்கியத் தொடர்பு கொண்டு அவர்களுடைய பிரச்சினைகள் குறித்தே ஓயாமல் சிந்தித்து வந்தார். இதன் காரணமாகவே அவர் மீது மக்கள் நீங்காத பற்றுக் கொண்டிருந்தார்கள். அனைத்திந்தியத் தலைவராக அவர் உயர்ந்த போதிலும் அவருடைய சிந்தனை மக்களைப் பற்றியதாக-அவர்களது வாழ்க்கை மேம்பாட்டைப் பற்றியதாக இருந்தது. அவருக்கு அகில இந்தியப் புகழை ஈட்டிக் கொடுத்தது. அவருடன் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதனைப் பெரும் பேறாகவே நான் கருதுகிறேன். முக்கியமான பிரச்சினைகளில் அவருடைய வழிகாட்டும் தன்மை, ஆலோசனை எனக்குக் கிடைத்திருக்கிறது.

''பிற்காலத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, நாங்கள் வேறு பாதையில் மாற நேரிட்ட போதிலும், சமுதாயத்தில் பலவீனமான மக்களை உயர்த்தும் பிரச்சினையில் ஒன்றுபட்டிருந்தோம். இந்த விஷயத்தில் எனக்கு ஒரு மித்த ஆலோசனை கூறிய தலைவராக காமராஜ் விளங்கினார். பல முக்கியமான தேசியப் பிரச்சினைகள் குறித்து காமராஜுடன் அவர் டெல்லி வந்த போதெல்லாம் விவாதிக்கும் வாய்ப்பு எனக்குத் தொடர்ந்து கிட்டி வந்தது. அப்போதெல்லாம்கூட அவர் முழுமையான ஆரோக்கியத்துடன் விளங்கவில்லை.

''என்னுடைய உடல்நிலை நன்கு தேறட்டும், பொதுக்குறிக்கோள் இலட்சியம் நிறைவேற நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட இறுதி முடிவு எடுப்போம்'' என்று என்னிடம் கூறினார்.


''ஆனால் காமராஜர் அகால மரணமடைந்து விட்டார். இதன் காரணமாகவும் அவரது மறைவுச் செய்தி என்னைப் பொறுத்தவரையில் பேரதிர்ச்சியாக இருந்தது. அவருடைய மறைவு தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி, இந்தியாவுக்கும் பேரிழப்பு. தனிப்பட்ட முறையில் எனக்கும் பேரிழப்பு.

''இந்தியாவை எதிர்நோக்கியுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு அபாயங்களை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அவைகளைச் சமாளிக்க அனைவரும் கட்டுப்பாடு, ஒழுங்குடன் ஒருசேர ஒன்றுகூட வேண்டும் என்று அவர் விரும்பினார்.

''நினைவுச் சின்னத்தோடு நாம் திருப்தி அடைந்துவிடக் கூடாது. அது எத்தகைய பெரிய சின்னமாக இருந்தாலும் சரி, நாம் இளைஞர்களின் இதயங்களில் அவருக்கு நீங்காத நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் காமராஜ் எந்த இலட்சியத்திற்காக நாட்டிற்கு உழைத்தாரோ, எந்த சேவைக்காக இறுதியில் தன் உயிரையும் அர்ப்பணித்தாரோ அந்த இலட்சியத்தை நோக்கி பாடுபட ஆக்கம் பெறுவதாக அமைய வேண்டும்.'' என்று குறிப்பிட்டார்.

தமிழக அரசினால் 7.5 இலட்ச ரூபாய் செலவில் உருவாக்கப் பெற்றுள்ள இந்த நினைவகம், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அயராத தொண்டு, உழைப்பு, தியாகம், திறமை, அரசியல் வாழ்வு ஆகிய பல்வேறு பண்புகளை, நாட்டிற்கு-நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்ற ஒரு நினைவுச் சின்னமாக என்றென்றும் விளங்கும் என்பது உறுதி.

# நோய் தடுக்கும் அறிவைப் பரப்புவோம்!



"நமது பரந்த நாட்டில் எவ்வளவு மருத்துவமனைகள் இருந்தாலும் சரி, மருத்துவ உதவி தேவைப்படுகின்ற ஒவ்வொருவருக்கும் சிகிச்சையளிக்க இயலுமா என்பது தெரியவில்லை. எனவேதான், நாம் இரு முனைகளிலிருந்தும் செயல்பட வேண்டும். ஒரு புறத்தில் நோய்கள் பற்றி நிபுணர்கள் ஆராய, மறுபுறத்தில் சாதாரண நோய்களைத் தீர்க்கவும், அத்துடன் மக்களுக்கு நோய்த் தடுப்பு பற்றி அறிவூட்டவும் செயல்பட வேண்டும்.

''நோய்களைத் தடுப்பது குறித்து பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் சிறிதளவு விஷயஞானம் இருந்தாலும் போதும், நோய்களில் பலவற்றைத் தடுக்க முடியும்.''

''போதுமான மருத்துவ வசதியற்ற இந்நாட்டில் பாலைவனத்தின் நடுவே அமைந்த சோலைகள் போல மதிப்புமிக்க மருத்துவக் கல்லூரிகளும், மருத்துவ மனைகளும் உள்ளன.

''இந்த மருத்துவக் கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெற்று செல்வோருக்கு, மற்றவர்களுக்கு அறிவூட்ட வேண்டிய பெரும் பொறுப்பு உள்ளது.

''பலநோய்கள் ஒழிக்கப்பட்டு விட்டன. ஆனால் அவற்றின் இடத்தை வேறு நோய்கள் பிடித்துக் கொண்டுள்ளன. இப்படிப் புதிதாக நோய்கள் தோன்றும் போது அவற்றை எதிர்த்து நிற்கும் பலம் பெறுவதற்கு நாம் மக்களுக்கு உதவியாக வேண்டும்.

''மருத்துவம் செய்வது சமூக சேவையாக இருக்க வேண்டும். அது தொழில் நுட்பமாகச் செயல்படக்கூடாது. மருத்துவமனைகளை 'தொழில்' என்று கருதக் கூடாது.''

இவ்வாறு வேலூர் 'கிறிஸ்துவ மிஷன்' கல்லூரி (சி. எம். சி.) மருத்துவமனை இருதய சிகிச்சைப் பிரிவின் வெள்ளி விழாவைப் பிரதமர் இந்திரா காந்தி துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில் மருத்துவம், கல்வி ஆகிய துறைகளில் கிறிஸ்துவ சமூகத்தினர் செய்து வரும் சேவையைப் பிரதமர் பாராட்டினார்.

நோய்கள் வராமல் தடுப்பதில் மக்களுக்கு அறிவூட்ட இடையருத முயற்சி தேவை என்றும். மருத்துவத் துறை ஆராய்ச்சியின் பலன்கள் மக்களுக்குக் கிட்ட வேண்டும் என்றும் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வலி அவர்கள் வலியுறுத்தினர்.


நமது கிராமங்களில் பணி புரிவதற்குரிய டாக்டர்களைப் பயிற்றுவிப்பதில் தனிக் கவனம் செலுத்துவதற்காக வேலூர் மருத்துவ மனைக்குப் பிரதமர் பாராட்டும் தெரிவித்தார்.

## ஒரே வாரத்தில் 10 தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டன!

"தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி செயல்படுவதற்கு முன்பாக 25,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட 21 தொழில் தகராறுகள் நிலவின. குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி ஏற்பட்ட ஒரே வாரத்தில் 20,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட 10 தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டன. சமீபத்தில் தீர்க்கப்பட்ட தொழில் தகராறுகளில் மிகப் பெரியது 'மதுரை கோட்ஸ் லிமிடெட்' நிறுவனம் பற்றியதாகும். இதனுல் 18,000 தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினுர்கள். மீதியுள்ள தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன".

—ஆர். வி. சுப்ரமணியன்

[தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் ஆலோசகரான திரு. ஆர். வி. சுப்ரமணியன் அவர்கள் 9-2-76 அன்று பத்திரிகைச் செய்தியாளர்களிடையே கூறிய செய்தி].



# இளைஞர்களுக்கு பிரதமர் கூறிய அறிவுரை

"கல்வி பயிலுவது வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்காக என்ற வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக மட்டும் இல்லாமல், மாறுதலின் சவால்களை சமாளிப்பதற்காகவும் அமையவேண்டும். அத்தகையப் பயனுள்ள கல்வி, மதம், இடம் முதலிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட வகையில் எல்லாருக்கும் கிட்டுமாறு செய்ய வேண்டும்.''

''மாறுதலைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுவதாகவும், அதற்கு தயாரானதாகவும் கல்வி அமைய வேண்டும். மாறுதல் தேவைப்படுகின்றபோது வேலைகளுக்கான சிறு தொழில் பயிற்சிக்கு மாறுவது என்று மட்டும் அது கருதப்படுகிறது. வேலை வாய்ப்புகளும், வாழ்க்கையில் பாதுகாப்பும் இளைஞர்களுக்கு அவசியமே. ஆனால் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்காக மட்டும் படிப்பது கல்வியை, தவறாகப் பயன்படுத்துவது ஆகும். உலகம் மாறுதல் அடைகின்றபோது புதுவேலைகளும், பொறுப்புகளும் உருவாகும். இளைஞர்களுக்கு குறிப்பிட்ட வேலைகளில் மட்டும் பயிற்சி அளிக்கப்பட்டால், உலக மாறுதலை யொட்டி உருவாகக் கூடிய வாய்ப்புகளின் பயனை அவர்களால் அடைய இயலாது. இந்தத் துறையில் சரிப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

''இளைஞர்கள் வாய்ப்புகளை எதிர்நோக்க வேண்டும். வாய்ப்புகளைத் தேட வேண்டும்.' வாய்ப்புகள் நிறைய உள்ளன. வாய்ப்புகள் போதிய அளவில் இல்லையென்றாலும், நான் கல்லூரியில் படித்த போது இருந்ததைவிட, இப்போது அதிக வாய்ப்புகள் உள்ளன. ஆனால் நாம் விரும்பக் கூடிய அளவில் இல்லை. வேலை வாய்ப்பின்மை நிறைய இருக்கிறது. நாட்டின் பொருளாதார பிரச்சனைகளைக் கருத்தில்கொண்டு பார்க்கின்றபோது, வேலையில்லாத் திண்டாட்டத்தை பெருமளவுக்குக் குறைக்க நம்மால் முடிந்திருக்கிறது.'

''உங்கள் பாதையில் வரக்கூடிய எதற்கும் உங்களுடைய மனத்தைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே கணித்து, அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள பயிற்சி பெற்று தயாராகிட வேண்டும்.''

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் 14-2-76 அன்று மாலை சென்னை ராயப்பேட்டையில் உள்ள புதுக் கல்லூரியின் நிருவாகக் கட்டடத்தைத் திறந்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## ஒழுக்கம் தேவை!

"ஒழுக்கம் என்பது உள்ளுணர்வாகவே ஏற்பட வேண்டும் என்று நம்புகின்றேன்.. ஒழுக்கம் என்பது மேலேயிருந்து உள்ளத்தில் புகுத்திவிடக் கூடியதல்ல. ஆனால் அண்மைக் காலத்தில் நமது நாட்டில், ஒழுங்கினமாக நடந்து கொள்வது ஒரு 'பேஷனாக' ஆகி விட்டது. யாராவது ஒருவர் ஒழுங்கீனமின்றி நடந்து கொண்டால், அவர் ஏற இறங்கப் பார்க்கப்படுகிறார்; கேலிக்கு உள்ளாகிறார்; அரசைப் பின்பற்றுகிறவர் என்று அழைக்கப்படுகிறார். யாரேனும் ஒருவர், வேறு யாரேனும் ஒருவரை முழுக்க முழுக்கப் பின்பற்றினால், அவர் முறையாக நடந்துகொள்பவராகவும், தானே சிந்திக்கக் கூடியவராகவும் கருதப்படுகிறார். ஆனால் அரசுக்காக யாரேனும் செயல்பட்டால், உடனே அவர் சிந்திக்கத் திறனற்றவராகக் கருதப்படுகிறார். எனவேதான், எல்லா வகையான தனித்த-முறையற்ற - எண்ணங்களும், அணுகுதல்களும் தோன்றின. அது தனிப்பட்டவர்களின் விவகாரம் அல்ல; தனிப்பட்ட ஒருவருக்கு எதிரானதல்ல; தனிப்பட்ட கட்சிக்கு எதிரானதல்ல; ஆனால் அதன் இறுதி முடிவு நாட்டின் வளர்க்கும், மேம்பாட்டிற்கும் தடையானதாக இருக்கிறது என்பதை நாங்கள் அறிந்து கொள்ளும் வரை அவைகளைப் பற்றி முதலில் நான் கவலைப்படவில்லை. அது சிறுபான்மையினரின் நலனுக்கு எதிராகவும் செயல்பட்டது. அது ஏழை எளிய மக்களின் நலனுக்கு ஊறுவிளைவிப்பதாகவும் செயல்பட்டது; ஏனெனில் எந்த ஒரு கஷ்டத்தையும் எப்பொழுதும், தாங்கிக் கொள்கிறவர்களாகவே அவர்கள் உள்ளனர். பணக்காரர்களாகவும், சக்தி வாய்ந்தவர்களாகவும் உள்ளவர்கள் தங்கள் கஷ்டங்களைத் தவிர்த்துக் கொள்ள வழி காண்கிறார்கள்; நிலைமைக்கு ஏற்ப சரி செய்து கொள்ளவும் வழி காண்கிறார்கள். எளியவர்களே கஷ்டத்தைச் சுமக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்; எனவேதான் நாம் ஒழுங்கின்மைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிட்டது.''

—இந்திரா காந்தி


**(புதுக்கல்லூரி நிருவாகக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டது.)**

# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்! நியாயமான விலைகள்!




## அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.




## படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



## லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.



## துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கைத்தறியே வண்ணத்துப்

பதிவு எண். M. 8676

# சாதனை மிகு பத்தாண்டு




## நாடு நடைபோடுகிறது

சுய சார்பை நோக்கி
கட்டுப்பாடுடன் கூடிய சமூக
வாழ்வை நோக்கி
மேம்பாட்டை நோக்கி.

ம் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
ரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.